# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு2029 மாசி 28 வியாழக்கிழமை (12-03-1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்:90


# திருமலைத் துறைமுகப் பகுதியில்
# நேற்று தற்கொலைத் தாக்குதல்!

## கடற்படைப் படகு மூழ்கடிப்பு 2படையினரை காணவில்லை

திருகோணமலை, மார்ச் 12

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் றவுண்ட் தீவுக்கும் எலிபென்ட் தீவுக்கும் இடையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் படகு ஒன்று தாக்கி அழிக்கப்பட்டது.

படகு தாக்கப்பட்டுக் கடலில் மூழ்கடிக்கப்பட்டபோது அதில் ஏழு படையினர் இருந்ததாகவும் அவர்களில் ஐவர் காப்பாற்றப்பட்டுவிட்டதாகவும் இருவர் பற்றித் தகவல் எதுவும் இல்லை என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

புலிகளின் தற்கொலைப் படகு துறைமுகத்துக்குள் நுழைய முற்பட்டதாகவும்— அந்த நேரம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரின் அதிவேக ரோந்துப் படகு புலிகளின் படகு மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோது கடற்படைப்படகுக்குச் சமீபமாக வந்து புலிகளின்படகு வெடித்துச் சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் திருகோணமலைத் துறைமுகப்பகுதியில் நேற்று அதிகாலை கடற்படையினரின் அதிவேக டோறாப் படகே தாக்கி மூழ்கடிக்கப்பட்டதாக புலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துறைமுகத்தில் நின்ற எண்ணெய் கப்பலே இலக்கு

கொழும்பு, மார்ச் 12

திருகோணமலை துறைமுகத்துக்குள் நுழைய எத்தனித்த புலிகளின் தற்கொலைத் தாக்குதலின் இலக்கு எதுவாக இருக்கலாம் என்று பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டோர் மீது தாக்கு

மட்டக்களப்பு, மார்ச் 12

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் படையினர் ஒருவர் காயமடைந்தார்.

இரவு வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

(இ-21)

## மட்டக்களப்புக்கு வெளியே செல்ல நேற்று முதல் வாகனங்களுக்கு தடை

### புதிய நடைமுறை அமுல்

மட்டக்களப்பு, மார்ச் 12

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு வாகனங்கள் செல்வதற்கு நேற்று பிற்பகல் முதல் மறு அறிவித்தல்வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, கண்டி உட்பட அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்தே பாதுகாப்பு தரப்பு இந்நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து குண்டுகள் வாகனங்களில் எடுத்துவரப்படுவதாக பாதுகாப்பு தரப்பு விசாரணைகளில் தெரியவந்துள்ளது'

அதேசமயம் மட்டக்களப்பு — கொழும்பு போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பான புதிய நடை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர மேயர் நேற்று பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். மாநகர மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் நேற்றுக் காலை 10. 55 மணிக்கு தமிழில் பதவிப் பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக் கொண்டார்.

யாழ். மாநகர சபை முன்றலில் மாலை அணிவித்து வரவேற்கப்பட்ட யாழ். நகர மேயரும் மற்றும் உறுப்பினர்களும் பின்னர் மங்கள விளக்கேற்றினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. டி. பி. உடனடியாக பதவி ஏற்பு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 12

''உள்ளூராட்சிச் சபைகளை அரசியல் லாபம் கருதி நாம் நடத்த விரும்பவில்லை. மக்களின் தேவைகளை, நலன்களைப் பாதுகாக்கவே உள்ளூராட்சிச் சபைகளை நடத்த விரும்புகின்றோம். மக்களின் தேவைகள், நலன்கள் குறித்து ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகளை உள்ளூராட்சித் தேர்தல் வரும் முன்னரே நாம் முன்வைத்தோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை முகாம் மீது ஷெல் தாக்கு

வவுனியா, மார்ச் 12

மட்டக்களப்பு விமானப் படை முகாம் மீது புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தி உள்ளனர் என 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

நேற்று முன்தினம் மாலை 6. 30 மணி தொடக்கம் 6. 45 மணி வரை புலிகள் தாக்குதல் நடத்தியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ–9)

## வந்தாறுமூலையில் நேற்று படையினர் புலிகள் மோதல்

மட்டக்களப்பு, மார்ச் 12

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி, வந்தாறுமூலையில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 3 படையினர் உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற சம்பவத்தில் விடுதலைப்புலி என சந்தேகிக்கப்படும் ஒருவரின் சடலம் இராணுவத்தினரால் ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு துப்பாக்கி சமரில் காயமடைந்த 5 பொதுமக்களில் பல்கலைக்கழக ஊழியர் ஒருவரும் அடங்குவார்.

விடுதலைப் புலிகள் பயணம் செய்ததாக கருதப்படும் உழவுயந்திரமொன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அதன் உரிமையாளரான

(10 ஆம் பக்கம் பார்க்க)





யாழ். மாநகர மேயராக திருமதி சறோஜினி தேவி யோகேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்வதை முதலாவது படத்திலும், வைபவத்தில் பங்குபற்றிய பிரமுகர்களில் சிலரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

இந்த வைபவம்நேற்றுக் காலை யாழ். மாநகர சபை சல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது.

(இ-3)

படங்கள்: மணி

இளம் தலைமுறையின் இதயம் [illegible] இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,

பருத்தித்துறை.

**முறைசாராக்கல்வி**

ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு பயில விரும்பும் மாணவர்கள் சுய விவரத்துடன் 21-03-98க்கு முன் விண்ணப்பிக்குக.

(சி/3093) — அதிபர்


# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய நீதிமன்ற லிகிதர்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செ. பாலசுப்பிரமணியம் அவர்கள் 11-03-98 இல் காலமானார்.

இவர் மதியாபரணம் அவர்களின் அன்புக் கணவரும், உதயணன் (இ. போ. ச.), அசோகன் (ஜேர்மனி), மதிவதனி (ஆசிரியை, மட்டுவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராகினிதேவி, கலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், நிருபன், அஜிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-03-98) பிற்பகல் 2.00 மணியளவில் குச்சப்புட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;

மதியாபரணம் [மனைவி]

''றோகினி வாசா'' உதயணன் [மகன்[

மட்டுவில் தெற்கு, மதிவதனி [மகள்]

சாவகச்சேரி. [54006]

## ஐயாத்துரை பொன்னம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி பொலீஸ் நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பொன்னம்மா இறைபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், பு. தேவமனோகரி (ஆசிரியை, நுணாவில் மேற்கு, அ. த. க. பாடசாலை), ஜோ. மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), பா. செல்வரட்டினம் (கிராம சேவையாளர், மண்டுவில்), பா. சாரதாதேவி (விஸ்வமடு), குகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புலேந்திரகுமார், ஜோதிராஜா, பாலசுப்பிரமணியம், பாலசிங்கம், நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12-3-98) காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பு. தேவமனோகரி (மகள்)

பா. செல்வரட்டினம் (மகன்)

பொலீஸ் நிலைய வீதி,

சாவகச்சேரி. (54001)

## செல்லையா யோண்

Grape Consultant (MARD)

இளைப்பாறிய விவசாய உத்தியோகஸ்தர் A. O.

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செ. யோண் 07 — 03 — 1998 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா, யோட்சியானா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சாண்டோ செல்லையா, மறாயா அவர்களின் அன்பு மருமகனும், சவுந்தரமணியின் அன்புக் கணவரும், றீற்ரா, சுறேபி (Secretary R. O. M. I. N. Colombo), சோபேஸ் (டோகா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற எம்மிலி, குணரட்ணம் (முன்னாள் இளைப்பாறிய P. O. சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, - J. P. all Island), கெலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான சவுந்தரநாயகம், பேரின்பநாயகம் மற்றும் எஸ்தர், ராணி, ராசேந்திரம், திரேசம்மா, மரியநாயகம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், சுரேந்திரன் (சூரி) அவர்களின் சகலனுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை (12— 03— 1998) இன்று வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு (S. L. T.) வட்டுக்கோட்டை சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

சுறேபி

கல்லூரி ஒழுங்கை, (மகள்)

வட்டுக்கோட்டை. (53587)

# இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் விடுமுறை தொடர்பான சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கு—கிழக்கு பிரதேசங்களில் யுத்த நிலைமைகள், யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சேவைக்கு சமுகமளிக்க முடியாத அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட விடுமுறை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று அண்மையில் அரச திணைக்களங்களுக்கு அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஓர் அரச உத்தியோகத்தர் படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக குறிப்பிட்ட நாளில் தனது கடமைக்கு சமுகமளிக்க முடியாது போகின்ற சந்தர்ப்பத்தில் அவருக்கு விசேட விடுமுறை வழங்க முடியும் என்றும்—

இந்த விடுமுறை அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் விடுமுறைக்கு அனுமதி அளிக்கும் உத்தியோகத்தர் தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு அப்பிரதேசத்து நிலைமைகள்பற்றிய உண்மை நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

01-01-1996 இல் இருந்து இந்த சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

# 16 படையினருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

கடந்த நவம்பர் மாதம் அச்சுவேலி வாதரவத்தையில் இரு இளைஞர்கள் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 16 இராணுவத்தினரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

நேற்று இது தொடர்பான வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றில் எடுக்கப்பட்ட போது சந்தேக நபர்கள் தொடர்பான பொலீஸாரின் விசாரணைகள் முடிவுறாததாலும் இது குறித்து பலர் கைது செய்யப்பட வேண்டியிருப்பதாலும் தவணை வழங்குமாறு பொலீஸார் நீதிபதியிடம் விண்ணப்பித்தனர்.

இதனையடுத்து மேலதிக நீதிவான் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு விசாரணைகளை ஒத்திவைத்தார். (உ-5)

# மேர்ச்ஹண்டி மூலம் கொழும்புக்கு வெங்காயம்

நவாலி, மார்ச் 12

பருத்தித்துறைத் துறைமுகத்தில் தற்போது தரித்து நிற்கும் ''மேர்ச் ஹண்டி'' என்னும் கப்பல் மூலம் கொழும்புக்கு வெங்காயம் கொண்டு செல்லப்பட உள்ளது.

வெங்காயத்தை விற்பனை செய்ய விரும்புவோர் விவசாய நுகர்வோர் உற்பத்தி சங்கங்களின் சமாசத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் அந்தந்த சங்கங்கள் மூலமே வெங்காயம் கொள்வனவு செய்யப்பட இருப்பதால் பெட்டியின் கொள் அளவுக்கேற்ப வெங்காயம் கொள்வனவு செய்யப்படுமென விவசாய நுகர்வோர் உற்பத்தி சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-100)

# ஊரெழு மின்சாரம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஊரெழு கிராமத்துக்கு வழங்கப்பட்ட மின்சாரம் கடந்த டிசம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

காரணமில்லாமல் மின்சாரம் நிறுத்தப்பட்டதால் இப்பகுதியிலுள்ள மின் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

# தையல் பயிற்சி

நவாலி, மார்ச் 12

யாழ். வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் உதவியுடன் பளை பகுதியிலுள்ள வேம்போடுகேணி, இத்தாவில், முகமாலை, இந்திராபுரத் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான தையல் பயிற்சி வகுப்புகள் முகமாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் தத்தமது பகுதி கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பளைப் பிரதேச செயலர் சி. புத்திசிகாமணி கேட்டுள்ளார்

(இ-100)


எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ முதல் மரியாதை
★ மீனாட்சி திருவிளையாடல்
★ கந்தன் கருணை
★ எங்க வீட்டுப்பிள்ளை
★ சின்னக்கவுண்டர்
★ வெற்றி விநாயகர்

எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

★ சிவசங்கரி ★ கழுகு
★ கௌரவம்
★ புதுக் கவிதை
★ அன்னை ஓர் ஆலயம்
★ அலாவுதீனும் அற்புத விளக்கும்
★ கருத்தம்மா
★ வாய்மையே வெல்லும்
★ பரம்பரை
★ சதிலீலாவதி

சுப்பலோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/3095)

லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று காலை 10-30 மணிக்கு

பாக்கியராஜ் - நக்மா சாய்குமார் நடித்த

வேட்டியை மடிச்சுக்கட்டு

இன்று 2-30 மணிக்கு மட்டும்

அஜித்குமார் நடித்த

காதல் மன்னன்

(53782)

நெல்லியடி

மஹாத்மா

வெண் திரையில்

நேற்று முதல்

விஜய் - சுபலட்சுமி நடித்த

லவ் ருடே

காட்சிகள்: 10-30, 2-30

(பழைய நேரம்)

(சி/2756)

இன்று முதல் குதூகல ஆரம்பம்

யாழ். றீகல் வெண்திரையில்

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

25 அடி அகல வெண்திரையில்

காலை 10-30 மணிக்கு மட்டும் (பழைய நேரம்)

இலவச படக்காட்சியாக

சிவாஜி நடித்த

கர்ணன்

பிற்பகல் 2-30 மணிக்கு (பழைய நேரம்)

சுப்பஸ்ரார் ரஜனி நடித்த

பாட்ஷா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(54007)

யா/ஞானாசாரியார் கல்லூரி

கரவெட்டி.

முறைசாராக் கல்வி பயிற்சி நெறி

நடைபெறவுள்ள பயிற்சிகள்:-

1, படவரைதல், கட்டட நிர்மாணக் கலை

2, தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து

சேர விரும்புவோர் தமது விண்ணப்பங்களை 15 - 03 - 98 க்கு முன்பாக பாடசாலைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

— அதிபர்

(சி/3094)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதிய ஜனதா ஆட்சிக்குவரின்

# இந்தியாவுடன் பாதுகாப்பு கெடுபிடி நிலை உருவாகும்!

## மீண்டும் எச்சரிக்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், மார்ச் 12

இந்தியாவில் பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சிக்கு வருமானால் அந்த நாட்டுடன் ஆயுதப் போட்டியில் ஈடுபடவேண்டிய நிலைக்கு பாகிஸ்தான் நிர்ப்பந்திக்கப்படும்—என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹோகார் அயூப்கான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவை அணுவாயுத மயப்படுத்தப் போவதாக அடல்பிஹாரி வாஜ்பாய் தேர்தல் பிரசார காலத்தில் தெரிவித்தார். இந்தியா அணுவாயுத மயமானால் அது இந்தப் பிராந்தியம் முழுவதையுமே பாதிக்கும். எனவே பாகிஸ்தானையும் அது ஆயுதப் போட்டியில் ஈடுபடச் செய்யும் என்று அயூப்கான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அரசமைக்கவுள்ள பாரதிய ஜனதாக்கட்சியின் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்கள்தொடர்பாக பாகிஸ்தான் கடந்த சில நாள்களில் பல தடவைகள் எச்சரிக்கையான தொனியில் பதிலளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் ரகசிய ஆவணங்கள் மறைவு!

வாஷிங்டன், மார்ச் 12

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் அல்பிரைட்டின் அமைச்சிலிருந்து இரகசிய ஆவணங்கள் கடந்த மாதம் காணாமற் போயுள்ளதை அடுத்து அது குறித்து சமஷ்டி புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அல்பிரைட்டின் அமைச்சில் பணியாற்றிய செயலாளர் ஒருவர் மூலமே இவை காணாமற் போயிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

முழு விவரங்கள் கொண்ட உயர் சொத்தான அரிய தகவல்கள் அடங்கிய ஆவணங்களே காணாமற்போயுள்ளன என்று 'ரைம்' சஞ்சிகை தெரிவித்துள்ளது. எனினும் இது விடயமாக எவ்வித கருத்துக்களையும் சமஷ்டி புலனாய்வுப் பிரிவு மறுத்துவிட்டது.

மெடலின் அல்பிரைட்டின் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின்போது இச்சம்பவம் குறித்து பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து அவரிடம் கேட்கப்பட்ட போதும் அவர் எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை.

அல்பிரைட்டின் அமைச்சு அலுவலக ஏழாவது மாடியிலிருந்த ஆவணங்களே களவெடுக்கப்பட்டுள்ளன.

அந்த ஆவணங்கள் வெளிநாட்டுக் கொள்கை பற்றியதும், ஈராக் மீதான அமெரிக்க நடவடிக்கைகள் குறித்ததுமான அதிமுக்கிய ரகசிய ஆவணங்களாகும்.

(ஐ-7)

# கோசோவோ விவகாரம் உள்நாட்டு பிரச்சினை; பேச்சுவார்த்தை நடத்த சேர்பியநிர்வாகம் மறுப்பு!

பிறிஸ்ரினா, மார்ச் 12

கோசோவோ விவகாரம் சேர்பியாவின் உள்நாட்டுப்பிரச்சினை. சுதந்திரத்துக்கானதமது கோரிக்கையைக் கைவிடும் வரை அல்பேனிய இனத் தலைவர்களுடன் பேச்சு நடத்த முடியாது என்று சேர்பிய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கோசோவோ விவகாரம் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்ட வேண்டும் என்று சர்வதேச ரீதியாக குரல் எழுப்பப்பட்டு வரும் இவ்வேளையில் சேர்பிய நிர்வாகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

1989 ஆம் ஆண்டில் யூகோஸ்லாவியாவின் பகுதியாக இருந்து பின்னர் சேர்பியாவின் தென்மாகாணமாகிய பகுதியே கோசோவோ (Kosovo). இங்கு 18 லட்சம் அல்பேனிய இன மக்கள் (Ethnic Albanlan) வாழ்கின்றனர். இப் பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் இது 90 வீதம் ஆகும். அல்பேனிய இன மக்கள் தமக்கு சுயாட்சி வழங்குமாறு கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். கோசோவோ விடுதலை இராணுவம் (கே. எல். ஏ) என்ற தலைமறைவு கெரில்லாக்கள் கிராமங்களில் மக்களின் ஆதரவுடன் ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து துடைத்தழிக்கப் போவதாகக் கூறி சேர்பிய அரசு அல்பேனிய தீவிரவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கையை கடந்த வாரம் ஆரம்பித்தது.

ஹெலிகள் மூலம் சென்ற சேர்பிய படையினர் கோசோவோ கிராமங்களில் கெரில்லாக்களைத் தேடி அழிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டன.

கெரில்லாக்களின் பலம் மிகுந்த பகுதியான பிறிகிஷ் என்ற மலைக் கிராமத்தில் சேர்பியப் பொலீஸார் நடத்திய தாக்குதலில் 20 அல்பேனியர்கள் வரை உயிரிழந்தனர்.

பல நூற்றுக் கணக்கான அல்பேனிய இனமக்கள் இடம் பெயர்ந்தனர். இந் நடவடிக்கையின் போது ஆயுதங்களைக் கைப்பற்றியதாக பொலீஸார் கூறியுள்ளனர்.

கோசோவோ பிரச்சினையை கடுமையான முறையில் அடக்க யூகோஸ்லாவிய அதிபர் ஸ்லோபோடான் மிலோசெவிக் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அது அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகளின் கண்டனத்துக்கு இலக்காகியுள்ளது.

**உலக அரங்கில்**

கோசோவோ பகுதி அல்பேனியர்களின் விடயத்தில் பொறுப்புடனும், நியாயமாகவும் நடந்து கொள்ளுமாறு அதிபர் மிலோசெவிக்கிடம் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ரொபின் குக் ஐரோப்பிய யூனியன் மூலம் கேட்டிருக்கிறார்.

கோசோவோ நெருக்கடியில் தனது பங்களிப்பை வழங்க துருக்கி விருப்பம் தெரிவித்துள்ளது. (ஐ)

# அதிபர் கபா நாடு திரும்பினார்

கொனாக்ரி, மார்ச் 12

சியரா லியோனில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அஹமட் டெஜான் கபா மீண்டும் நாடு திரும்பியுள்ளார். இதனையடுத்து நாட்டை விட்டு வெளியேறிய மக்களும் நாட்டுக்கு திரும்புவதில் ஈடுபட்டுள்ளனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட கபா இராணுவ ஆட்சியாளர்களால் வெளியேற்றப்பட்டதை அடுத்து நைஜீரியா அவருக்கு அடைக்கலம் கொடுத்திருந்தது.

அத்துடன் நைஜீரியா தலைமையிலான மேற்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பலியான 50 பேரின் சடலங்கள் ஒப்படைப்பு!

பிரிஸ்ரினா, மார்ச் 12

தென் சேர்பிய மாகாணமான கோசோவோவில் சேர்பியப் படையினர் கடந்த வாரம் மேற்கொண்ட தேடி அழிக்கும் நடவடிக்கைகளில் பலியான அல்பேனியர் இனத்தவர்களில் 50பேரின் சடலங்களை சேர்பிய பொலீஸார் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

பலியானோரின் அதிக எண்ணிக்கையான சடலங்களை முதன் முறையாக ஒன்றாகக் கண்ட அல்பேனிய இன மக்கள் கதறி அழுதனர்.

சடலங்களை அடக்கம் செய்வதற்கு முன்னர் அவற்றை சுதந்திரமான சட்ட வைத்திய நிபுணர்களின் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு அல்பேனியர்கள் கோரியுள்ளனர்.

தேடி அழிக்கும் நடவடிக்கையில் கைதானவர்களை சேர்பியப் பொலீஸார் சித்திரவதை செய்து கொன்றிருக்கலாம் என அல்பேனியர்கள் கருதுகின்றனர். சேர்பியப் படைகளின் நடவடிக்கையில் அல்பேனிய இனத்தவர் 70 பேர் வரை பலியாகியிருக்கலாம் என ஒரு செய்தி தெரிவித்தது. (ஐ)

# அணுக்கழிவு ஏற்றி வந்த கப்பலை ஜப்பானுக்குள் அனுமதிக்க மறுப்பு!

## பாதுகாப்பு உத்தரவாதம் தரப் பணிப்பு

ரோக்கியோ, மார்ச் 12

பதப்படுத்தப்பட்ட அணுக்கழிவுகளை ஏற்றிச் சென்ற ''பசுபிக் சுவேர்ன்'' என்ற பிரிட்டிஷ் கப்பல் ஜப்பானின் வடபகுதி துறைமுகம் ஒன்றினுள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அணுக் சழிவுகள்தொடர்ந்தும் தமது பகுதிக்குள் நிரந்தரமாகச் சேமித்து வைக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியை ஜப்பானிய அரசு வழங்கும் வரை கப்பலை துறைமுகத்துக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்று துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து துறைமுகத்தில் இருந்து ஒருமைல் தொலைவுக்கு வெளியே அக் கப்பல் தற்போது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

பிரான்ஸில் பதப்படுத்தப்பட்ட 24 மெற்றிக் தொன் அணுக்கழிவுகள் இக்கப்பலில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 7 ஆவது முறையாகவும் சுஹார்ட்டோ பதவியேற்பு!

ஜகார்த்தா, மார்ச் 12

இந்தோனேசியாவின் அதிபராக மேலும் 5 ஆண்டு பதவிக் காலத்துக்கு ஜெனரல் சுவஹார்ட்டோ நேற்று பதவியேற்றார்.

முன்னாள் இராணுவ ஜெனரலான சுஹார்ட்டோ (வயது 76) இந்தோனேசியாவின் அதிபராக ஏழாவது தடவையாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தோனேசிய நாணயமான ரூபியாவின் மதிப்பு கிடுகிடுவென வீழ்ச்சி கண்டதால் நாடு சந்தித்துள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சுஹார்ட்டோ பதவியேற்றுள்ளார்.

ஜகார்த்தாவில் பதவியேற்பு வைபவம் நடைபெற்ற போது ஆர்ப்பாட்டம் செய்த 150 மாணவர்களை பொலீஸார் விரட்டினர்.

இந்தோனேசியாவின் தலைமை மாற வேண்டும்; ஜனநாயக சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அதிபர் சுஹோர்டோவினால்ா பஞ்சசீலகொள்கையின் படி உருவாக்கப்பட்ட இந்தோனேசிய அரசமைப்புச் சட்டம் தேர்தல் மூலம் எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றும் [illegible] இல்லாமல் செய்துள்ளது. (ஐ)

# உலகளாவிய ரீதியில் 'டெங்கு' பரவும் ஆபத்து!

வாஷிங்டன் மார்ச் 12

உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் வெப்பநிலையால் டெங்குக் காய்சல் போன்ற நோய்கள் பரவக்கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் பால்டிமோரிலுள்ள ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இவ்விடயம் தொடர்பாக புதிய எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

உலகில் மாற்றமடைந்துவரும் காலநிலைகளைகணனி மூலம் பிரதியிட்டு அவதானிக்கப்பட்ட போது திடுக்கிடும் உண்மைகள் வெளியாகியுள்ளன.

நுளம்புகளால் ஏற்படுகின்றன ''டெங்குக் காய்ச்சல்'' போன்ற வியாதிகள் உலகளாவிய ரீதியில் பரவக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

'டெங்கு' ஒரு மோசமான வியாதி என்பது விஞ்ஞானிகளின் ஏகோபித்த முடிவாகும். இதன் காரணமாக காய்சல், நிணநீர் முடிச்சுகளில் வீக்கம், இரத்தம் வடிதல், தசை நோவுகள் போன்றவை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது மரணத்துக்கே இட்டுச் செல்ல முடியும் என்றும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வெப்ப, உபவெப்ப வலயங்களில் இதன் பாதிப்புகள் அதிகமாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளார்கள்.

தேசிய சூழலில் சுகாதார விஞ்ஞான போதனா சாலையின் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள இந்த விவரம் உலகளாவிய ரீதியில் பாரிய அச்சத்தை தோற்றுவித்துள்ளது

இந்த ஆய்வை தலைமை தாங்கி நடத்திய டாக்டர் ஜொனாதன் பெட்ஸ் கருத்து வெளியிட்ட போது 'டெங்கு' போன்ற நோய்கள் புதிய தலை முறையினரை மிகமோசமான முறையில் பாதிப்படையச் செய்யலாம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வளர்ப்போரை பதிவு செய்யக் கோரிக்கை

உரும்பிராய், மார்ச் 12

வலி - கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் 95 ஆம் ஆண்டிற்கு முன்பு அங்கத்துவம் பெற்றிருந்த சகலரையும் நீர்வேலியில் இயங்கும் கால்நடை வைத்திய அதிகாரியின் பணிமனையில் தமது விவரங்களைப் பதிவு செய்யும்படி சங்கத்தின் நெறியாளர்குழு கோரியுள்ளது.

கடந்த காலப் பிரச்சினைகளின் போது அங்கத்தவர் பதிவேடு தொலைந்து விட்டதனால், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கிணங்க இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இச்சங்கத்தின் செயலாளர் கூறினார். (ஐ-154)

# எதிர்க்கட்சி எம். பிக்களின் சம்பளத்தை நிறுத்துக

## சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 12

ஐ. தே. க. உறுப்பினர்கள் தொடர்ந்தும் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்தால், அக்காலத்துக்கான அவர்களது சம்பளம் இடைநிறுத்தப்பட வேண்டும் என்று திட்ட அமுலாக்கல், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சபாநாயகரைக் கேட்டுள்ளார்.

தற்போது நாடாளுமன்றக் கூட்டங்களை பகிஷ்கரித்து வரும் ஐ. தே. க. உறுப்பினர்கள் இதனை 3 மாத காலத்துக்கு மேலும் நீடிக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற கூட்டங்களைப் பகிஷ்கரிப்பவர்கள் அந்தக் காலத்துக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொள்வது பண்பில்லாத செயல் — என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

# ஏற்புத்தடை, ஏ. ஆர். வி. ஊசி மருந்துகள் வந்தன

திருநெல்வேலி, மார்ச் 12

யாழ். சுகாதார திணைக்களத்தில் தட்டுப்பாடாக இருந்த ஏற்புத்தடை ஊசி மருந்து, விசர் நாய்க்கடிக்கான ஏ. ஆர். வி. ஊசி மருந்து, பாம்புகடிக்கான ஊசி மருந்து ஆகியன கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை, கோப்பாய் அரசினர் வைத்தியசாலை ஆகியன உட்பட குளிர்சாதன வசதி உள்ள முக்கியமான வைத்தியசாலைகளுக்கு யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக்களஞ்சிய பிரிவினர் இந்த ஊசி மருந்துகளை விநியோகம் செய்துள்ளனர். (ஐ-135)

## தபாலகம் இயங்குகிறது

நல்லூர், மார்ச் 12

இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த ஆறு வருடங்களாக இயங்காதிருந்தபண்டத்தரிப்பு விளான் தபாற்கந்தோர் மீண்டும் பெரியவிளானில் இயங்கத் தொடங்கியுள்ளது. (ஐ-103)

## மின்விநியோக நேரம் மாற்றம்

உரும்பிராய்ப் பகுதி மின்சார விநியோக நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரவு 7.00 மணி முதல் 11.00 மணிவரையும், காலையில் 5.00 மணிமுதல் 7.00 மணிவரையும் தற்போது விநியோகம் இடம்பெறுகிறது. [ஐ155]

# இந்துபோர்ட் இராஜரத்தினத்துக்கு சிலை அமைக்கப்படுவது அவசியம்

## கலைப்பீடாதிபதி சண்முகதாஸ் யோசனை

நல்லூர், மார்ச் 12

சேர் பொன். இராமநாதனுக்குப் பின்னர் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தை வளர்த்தெடுத்தவர் ''இந்து போர்ட்'' இராஜரத்தினம். இச் சங்கம் தொடங்கப்பட்டு 75 ஆவது ஆண்டு எதிர்வரும் மார்கழி மாதம் 31 ஆம் திகதி நிறைவு பெறுகிறது. எனவே இராஜரத்தினம் அவர்களை நினைவு கூரும் வகையில் திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்க வளவில் அன்னாருக்குச் சிலை அமைக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு யோசனை தெரிவித்தார்.

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் தமது தலைமை உரையில் மேலும் கூறியதாவது:-

இடப்பெயர்வின்பின் இந்த ஆண்டு மீண்டும் இயங்கும் சிறுவர் இல்லம் எல்லோரதும் ஆதரவை எதிர்பார்க்கிறது. கடந்த காலங்களில் எங்கள் இல்லத்துப் பிள்ளைகள் எமது மக்களின் நன்கொடைகளாலும், யாழ். வணிகர்களுடைய தாராள உதவிகளாலும், அரிமா கழகம், றோட்டறிக் கழகம் போன்றவற்றின் சேவைகளாலும் நிறை வாழ்வு பெற்று வந்தனர். அருட்கொழுந்தோடிய இத்தகைய நெஞ்சங்கள் மீண்டும் இப்பிள்ளைகளுக்கு தங்களாலான சேவைகளை நல்க வேண்டும் என் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் கல்விப் பணியினை இக் காலத் தேவைகளுக்கும் நடைமுறைகளுக்கும் ஏற்ற வகையிலே விரிவடையச் செய்து செயற்படுத்த வேண்டும் என்றார்.

பொதுக்கூட்டத்தில் புதிய இயக்குநர்சபையும் தெரிவு செய்யப்பட்டது. (அ-103)

## கோயிலில் மீண்டும் பூசை

நல்லூர், மார்ச். 12

பெரியவிளான் வடசேரிப் பிள்ளையார் கோயிலில் நித்திய பூசைகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஆறு வருடங்களாக இக்கோயிலில் பூசைகள் இடம்பெறாமல் இருந்தது. இக் கோயிலுக்கு இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட சேதம் ஐந்து லட்சம் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ -103)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்12

யாழ். வட்ட லியோகழகம் நடத்தும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இந்த ஆட்டம் பாசையூர் சென் அன்ரனீஸ் கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும். (ஐ)

# கருத்தரங்குகள்

யாழ். இந்து சமயப் பேரவையினரால் ஆலய அறங்காவலர், பரிபாலன சபை உறுப்பினர்களுக்காக நடத்தப்படும் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் அருட் கவி. சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும். இக் கருத்தரங்கில் இந்து சமயப் பேரவையின் உபதலைவர் ஆ, மகாலிங்கம் ''ஆலயங்களின் நிர்வாகம்'' என்ற தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ணன் ''ஆலயங்களில் கிரியைகள்'' என்ற தலைப்பிலும், இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் ''ஆலயங்களில் சிவாச்சாரியார்களின் கடமைகள்'' என்ற தலைப்பிலும்; பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் நா. வி. மு. நவரத்தினம் ''திருக்கோயில்களில் இசை'' என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்குவார்.

அண்மைக் காலங்களில் இடம் பெற்ற அசம்பாவிதங்களினால் அழிக்கப்பட்ட ஆலயங்களின் மீள் புனரமைப்பு மற்றும் ஆலய நிர்வாகப் பிரச்சினைகள் தற்போதைய சூழ் நிலையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் அங்கு இடம்பெறும்.

கருத்தரங்கிற்கு சமுகமளிக்கும் போது சேதமடைந்த ஆலயங்கள் பற்றிய விவரங்களுடன் வருகை தருமாறு இந்து சமயப்பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-7)

★ ★ ★

அகவொளி குடும்ப வளத்துணை நிலையம் நடத்தும் ''துணை தேடுதலில் பெற்றோரின் பங்கு'' என்னும் பொருளிலான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பாங்சால் வீதியிலுள்ள அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறும்.

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபரும் உளவியலாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் உரையாற்றுவார். (ஐ-4)

## இசை அரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 12

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மாதாந்த இசை அரங்கு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு ஆதீன கலா மண்டபத்தில் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர் ஆ. இராஜகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

செல்வன் குணராஜா நக்கீரன் தலைமையில் வேணுகான இசை நிகழ்வு அன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும். (ஐ-7)

## நூல் அறிமுக விழா

இணுவில் தெஸ்பியன் கலை வட்டத்தின் மாதாந்தக் கருத்தரங்குத் தொடரின் ஒரு நிகழ்வாக இன்று வியாழக்கிழமை மு. ப. 9.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பபிரிவு மண்டபத்தில் நூல் அறிமுகவிழாவும், நூல் சார்ந்த விமர்சன அரங்கும் இடம்பெறவுள்ளன.

யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனின் ''யாழ்ப்பாணத்து தமிழ் நாடக அரங்கு — விமர்சனக் கட்டுரைகள்'' என்னும் நூல் அறிமுக விழாவே இடம்பெறவுள்ளது. (ஐ)

# தகுதிகாண் ஆசிரியர் நியமனம்பெறும் 336 பேரின் விவரங்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், மார்ச் 12

குறிக்கப்பட்ட பிரதேசங்களில் அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூல தகுதி காண் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கென எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் நியமனம் பெறவிருக்கும் 336 தகுதி காண் ஆசிரியர்களின் விவரத்தை வடக்கு— கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாறு நியமனம் பெறும் ஆசிரியர்களுக்கு மூன்று வார காலத்திற்கு சேவைக் காலப்பயிற்சி வழங்கப்படுமெனவும் பயிற்சி முடிவில் அவர்களுக்கு உரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய நியமனம் பெறுவோரில் 50 பேரின் விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன. ஏனையோரின் பெயர்கள் தொடர்ந்துஉதயனில் வெளியாகும்.

★ வி. சுமதினி (யாழ்ப்பாணம்)
★ வை. பரந்தாமன் (மண்டைதீவு)
★ ஆர். பரமேஸ்வரி (காரைநகர்)
★ எஸ். எம். அஞ்சலா (கிளிநொச்சி)
★ பி. ராதா (காரைநகர்)
★ ஜே. வோஜினி ரோஸிற்ரா (ஊர்காவற்றுறை)
★ பி. நிறைமதி (காரைநகர்)
★ ஆர். யோகேஸ்வரி (நெல்லியடி)
★ எம். சாந்தினிதேவி (தொல்புரம்)
★ ரி. பிரியதர்சினி (ஊர்காவற்றுறை)
★ கே. அருட்செல்வி (யாழ்ப்பாணம்)
★ ஏ. எவ். எம். பிறிஸ்கா (நாவாந்துறை)
★ என். சகுந்தலாதேவி காரைநகர்)
★ சி. அருட்செல்வி (கிளிநொச்சி)
★ எஸ், சுகிர்தா(தையிட்டி)
★ கே. தாரணி(தையிட்டி)
★ எஸ். புஸ்பவதி(மாவிட்டபுரம்)
★ ஜி. உதயரூபன் (மாவிட்டபுரம்)
★ எம். சியாமினி (விழிசிட்டி)
★ வை. ரோகினிதேவி (அச்சுவேலி)
★ பி. அருணன் (மீசாலை தெற்கு)
★ எஸ். தாரணி (இடைக்காடு)
★ கே. விஜயமாலா(உரும்பிராய் கிழக்கு)
★ என். சிவகரன் (கோப்பாய்)
★ எஸ். பத்மலோஜினி (வரணி வடக்கு)
★ ரி. இந்திரா (புத்தூர் மேற்கு)
★ கே. கோமதி (நீர்வேலி)
★ எம். வசந்தராணி (அச்சுவேலி தெற்கு)
★ ஆர். திலகா (உரும்பிராய்)
★ பி. சுதர்சனா (அச்சுவேலி வடக்கு)
★ டி. கோணேஸ்வரன் (உரும்பிராய் கிழக்கு)
★ கே. கே. பிறேமிளா (இடைக்காடு)
★ எஸ். உமாமகேஸ்வரன் (அச்செழு)
★ பி. ஜே. [illegible] (நாயன்மார்கட்டு)
★ ரி. அமிர்தன் (புத்தூர் கிழக்கு)
★ எஸ். பகீரதி (நீர்வேலி மத்தி)
★ கே. மைதிலி (கோப்பாய் தெற்கு)
★ எஸ். சிறீராகவன் (ஆவரங்கால்)
★ கே. லலித நந்தாதேவி (வாதரவத்தை)
★ எம். சிறிதரன் (கதிரிப்பாய்)
★ பி. வித்தியா (இடைக்காடு)
★ எஸ். சிவலோஜினி (இடைக்காடு)
★ கே. கேதீஸ்வரன் (ஆவரங்கால்)
★ பி. தவமணிதேவி (கோப்பாய் வடக்கு)
★ வி. கணேசலிங்கம் (கோப்பாய் வடக்கு)
★ பி. ஜெயசெல்வன் (அல்வாய் வடக்கு)
★ பி. விஜிதா (புலோலி மத்தி)
★ ஐ. ஸ்ரீ குமரபரன் (பொலிகண்டி)
★ எஸ். பானுமதி (வியாபாரிமூலை)
★ ரி. ரமேஷ்வரன் (அல்வாய் வடக்கு)

(ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில்

## பயணிகள் மீதான கெடுபிடி நீக்க புதிய ஒழுங்குமுறை

நல்லூர், மார்ச் 12

கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ். நகர்வரும் பயணிகள் யாழ். பஸ்நிலையத்தில் வாடகைக் கார் மற்றும் ஒட்டோ சாரதிகளின் கெடுபிடுகளுக்கு உள்ளாவது தடுக்கப்பட்டுள்ளது.

பயணிகள் யாழ். பஸ் நிலையத்துக்கு வந்து பஸ்ஸில் இருந்து இறங்கும் போதே சாரதிகள் ஓடிச் சென்று அவர்களின் பொதிகளில் பிடித்து தமது வாகனத்தில் செல்வதற்கு ஆள் சேர்க்கும் சம்பவங்கள் இடம் பெற்று வந்தன. இதனால் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு போக்குவரத்துப் பொலீசார் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து புதிய நடைமுறை ஒன்று அமுல் படுததப்பட்டுள்ளது.

இதன்படி ஹற்றன் நஷனல் வங்கிக்கு முன்பாக முறைப்படி ஐந்து ஓட்டோக்களும் வாடகைக் கார்களும் நிறுத்தப்பட்டிருக்கும். இவற்றில் பயணிகள் ஏறிக்கொண்டதும் அடுத்து ஐந்து கார்களும் ஓட்டோக்களும் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தப்படும். இவ்வாறு மாறிமாறி ஒழுங்காக பயணிகள் செல்லக் கூடியதாக புதிய நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் சிரமமின்றிச் செல்லக் கூடியதாக உள்ளது.

போக்குவரத்துப் பொலீசாரும் ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தினரும் இணைந்து இந்த நடைமுறையை அமுல்படுத்தியுள்ளனர்.

(ஐ-103)

## ஆசிரியர் நியமனத்தில் அநீதி

1996 ஆம் ஆண்டு ஆசிரியர் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் உயர் புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த நியமனம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவில் 3 வருடம் தொடர்ச்சியாக வதிவிடத்தைக் கொண்டவர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. வடக்கு—கிழக்கு மக்கள் தமது சொந்த வதிவிடங்களில் வதியாமல் இடம் பெயர்வதற்கு யுத்தம் காரணமாக இருந்தது. கிராம சேவையாளர்கள் கூட வெவ்வேறு கிராம மக்களுக்கு தவறாக வதிவிடச் சான்றுகள் வழங்கி உள்ளனர். இதனால் குறித்த கிராமத்தில் பரம்பரையாக வாழ்ந்தவன் அதிகூடிய புள்ளியைப் பெற்றும் ஆசிரிய நியமனம் பெறாமல் போன துரதிர்ஷ்ட நிலைமை யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

ஆசிரியத் தொழிலும், வைத்திய தொழிலும் திறமையாளனுக்கு வழங்கப்பட வேண்டும் என அறிஞர்கள் கூறுவார்கள். ஆனால் இங்கு நடந்தது என்ன? கூடிய புள்ளிகள் பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டு போலி வதிவிடச் சான்றிதழ் பெற்று குறுக்கு வழியால் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளனர். இது வெளிப்படையான அநீதி. நீதிக்காக குரல் கொடுக்கும் அமைப்புக்களும், கட்சிகளும் இதில் தலையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிவழங்க வேண்டும்.

ஆ. சிவஞானம்.

களபூமி, காரைநகர்.

## மேலதிக கட்டண கடுகதித் தபால்கள் செல்லும் வேகம்!

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ். நகர் திரும்பி தமது கடமைகளை துரிதமாக வளர்த்த பெருமை தபாற் திணைக்களத்துக்கே உண்டு. அநேகமாக ஏனைய அரச திணைக்களங்களின இயக்கத்துக்கு பின்னின்று ஒருவர் தள்ள; முன்னின்று ஒருவர் இழுக்க ஆள்கள் தேவைப்பட்டுக் கொண்டிருக்க தபாற் திணைக்களம் சுயமாகவே வேகமாகச் செயற்பட்டது. அக்கால கட்டத்தில், ஒருநாள் 'உதயன்' பத்திரிகையில், பத்து ரூபா பெறுமதியான முத்திரைகளை மேலதிகமாக ஒட்டுவதன் மூலம், கடுகதிக்கடிதங்களாக, தங்கள் கடிதங்களை பொதுமக்கள் அனுப்புவார்களாயின் அவை விமானமூலம் கொழும்புக்கு அனுப்பப்படும் என யாழ். பிரதம அஞ்சல் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் அறிக்கைவிட்டிருந்தார். அவ்வாறே 10 ரூபா மேலதிக கட்டணம் செலுத்தப்பட்ட கடிதங்கள் கடுகதி வினியோகத்துக்காக விமான மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டும் வந்தன,

ஆயினும் தற்போது 10 ரூபா மேலதிக கட்டணம் செலுத்தப்படும் கடுகதிக் கடிதங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலமாகவே அனுப்பப்படுவதாக அறிகிறோம். சாதாரண 2 ரூபா 50 சத முத்திரைகள் மட்டும் ஒட்டப்படும் கடிதங்கள் விமான மூலம் அனுப்பப்படுகின்றன. கொழும்பு — யாழ். விமான தபாற் சேவையில் கடுகதிக் கடிதங்கள் வழமைபோல் வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சாதாரண கடிதங்களை விமான மூலம் அனுப்புவதை மிக மகிழ்வோடு வரவேற்கும் அதேநேரத்தில் கடுகதி விநியோகத்துக்கு மேலதிக கட்டணம் செலுத்தப்பட்ட கடிதங்கள், முன்னர் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு மாறாக நிறுத்தப்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. இம்மாற்றம் பற்றி பத்திரிகை அறிவுறுத்தல்கள் வெளியிடப்படவில்லை. புறநகர் அஞ்சல் அதிபர்கள் கடுகதிக் கடிதங்கள் கப்பல் மூலம் அனுப்பப்படுதல் பற்றி ''ஏதும் அறியோம்'' என்கிறார்கள்.

இம்மாற்றத்தின் மறைப்பு தங்கள் திணைக்கள வருமானத்தை இழக்க வேண்டி வருமே என்ற காரணம் காரணமோ?

தொடர்புச் சாதன வளர்ச்சி எதிர்பார்க்கப்படும் இக்காலத்தில் மாட்டுவால் வளர்ச்சியை ஏன் தபாற் திணைக்களம் ஏற்கிறது?

உட்பூசல்கள் தான் இவற்றுக்கு காரணமோ? உரியவர்கள் பதில் சொல்லட்டும்.

க. சிவராசா

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியினர் வவுனியா செல்வதற்குப் புதிய திட்டம்

வவுனியா, மார்ச் 12

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியிலிருந்து மன்னார், வவுனியாவுக்கு வரும் பொதுமக்கள் தொடர்பாகப் புதிய ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

நேற்று முன்தினம் வவுனியாவில் நடந்த உயர்மட்டப் மாநாடு ஒன்றில் இந்த புதிய நடைமுறை குறித்து முடிவு செய்யப்பட்டது.

வவுனியா, மன்னார் இராணுவ இணைப்பதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள், வவுனியா — மன்னார் அரச அதிபர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட இந்த மாநாடு வவுனியா இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய தலைமையில் நடந்தது.

புதிய நடைமுறை வருமாறு:—

★ மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து உயிலங்குளம் வருவோர் நேரடியாக மன்னார் நகருக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

★ கிளிநொச்சி, வவுனியா, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வருபவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வவுனியாவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

★ இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக வருபவர்கள் மன்னார் பேசாலை அகதி முகாமுக்கு அனுப்பப்படுவர்.

★ மன்னாருக்குச் செல்லும் பயணிகள் செட்டிகுளத்தில் வீடியோ படம் எடுக்கவேண்டும் என்ற நடைமுறைக்குப் பதிலாக அவர்கள் மன்னாரில் படமெடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

(உ-164-3)

## சிமெந்து வழங்க ஏற்பாடு

சண்டிலிப்பாய், மார்ச் 12

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் யுத்த கால அனர்த்தங்களினால் வீடுகள் சேதமடைந்த மக்களுக்கு இலவசமாக சிமெந்து வழங்கப்படவுள்ளது.

இந்த சிமெந்தைப்பெற இருப்பவர்களின் பெயர்ப் பட்டியல் அவ்வப் பிரிவு கிராம அலுவலர் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படவிருப்பதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார். (ஐ-135)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 12

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் நா. சண்முகரத்தினம் தலைமையில் ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

கோப்பாய் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் பிரதம விருந்தினராகவும், அ. சற்குணநாதன், சீ. கதிர்காமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ)

## கிராம அலுவலர் இட மாற்றம்

செம்பியன்பற்று, மார்ச் 12

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள செம்பியன்பற்று கிராம அலுவலர் சி. எழிலரசன் கோப்பாய்பிரதேசசெயலகத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். இவரின் பிரிவிற்கு தற்போது வ. தவராசா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-36)

## பாடகர் மரணம்

கொழும்பு, மார்ச் 13

பிரபல சிங்களப் பாடகர் மில்டன் மல்லவராய்ச்சி (51வயது) தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் நேற்று முன்தினம் மரணமானார். 150—க்கு [illegible] பின்னணிப்பாடகராக இருந்த இவர் [illegible] நடித்துள்ளார். (உ-3)

# செய்திக் கொத்து

### சமூக, விஞ்ஞான படிப்பு வட்டம்

பல்வேறு அறிவுத்துறை சார்ந்தோரை உள்ளடக்கி, ''சமூக விஞ்ஞான படிப்பு வட்டம்'' என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று பலாலி ஆசிரிய கலாசாலையில் ஏ. ஜே. கனகரட்ணா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினம் செயற்குழுவொன்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்ளடங்கிய ஆலோசனைக் குழுவொன்றும் தெரிவானது.

ஆரம்பத்தில் சமூக விஞ்ஞானம் சார்ந்த கலந்துரையாடல்களை இவ்வமைப்பு செயற்படுத்துமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-27)

### ஆசிரியர் பற்றாக்குறை

தென்மராட்சி. மார்ச் 12

பளை வேம்போடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் மாணவர்கள் கல்வி நிலை பாதிப்படைவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இப் பாடசாலைக்கு 22 ஆசிரியர்களின் பதவிகள் உள்ள போதிலும் தற்போது 14 ஆசிரியர்களே உள்ளனர்.

(ஐ-117)

### உதைபந்தாட்ட லீக் அமைப்பு

மயிலணி, மார்ச். 12

வலிகாமத்துக்கென தனியான உதைபந்தாட்ட லீக் ஒன்றை உருவாக்குவதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்றும்—

ஒவ்வொரு கழகங்களிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

### இலவச மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், மார்ச் 12

வல்வெட்டித்துறை சமரபாகு கிராமத்தில் வாழும் வறுமைக்கோட்டின் கீழுள்ள கண்பார்வை குறைந்த 18 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைகிளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்ணாடிகளை வழங்கியது.

தொடர்ந்து தொண்டமானாறு பகுதியில் வாழும் வறுமைக்கோட்டின் கீழுள்ள பார்வைகுறைந்த மக்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட இருப்பதாகவும்—

இதற்கான விவரங்களை திரட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும்— தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### அதிபர் அலுவலகம்

பளை வேம்போடுகேணி சீ. சீ. த. க. பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா செலவில் அதிபர் அலுவலகம் இத்தாவில் பகுதியைச் சேர்ந்த நலன் விரும்பியொருவரால் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் அதிபர் அலுவலகம் இல்லாதது பற்றி தெரிவிக்கப்பட்ட போது தனது சொந்தச் செலவில் புதிய அதிபர் அலுவலகம் நிர்மாணித்துத் தருவதாக அந்த நலன் விரும்பி எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.

(ஐ-117)

### கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

வல்வெட்டித்துறை சமரபாகு கிராமப் பகுதியில் தற்போது கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாக தெரிய வருகிறது.

அப்பகுதியில் பெரும்பாலான இடங்களில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் இடம் பெற்று வருவதால் பல சமூக விரோதச் செயல்களும் இடம் பெறுவதாக தெரிய வருகிறது. (இ-15)

### விதைகள் இல்லை

தென்மராட்சி, மார்ச் 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கான விதைகள் இல்லாததால் தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து விதைகள் வாங்கிப் பயிரிடுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

(ஐ-117)

### திருக்குறள் சுருக்க நூல்

பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினர் திருக்குறள் சுருக்கவுரை நூலை வெளியிட்டுள்ளனர். பாடசாலைகளில் ஆண்டு 7 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இவற்றை இலவசமாக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக, மேற்படி நிறுவனத்தின் நிறுவனர் ஆ. சி. முருகுப்பிள்ளை தெரிவித்தார்.

பாடசாலைகள் தமது கடிதத் தலைப்புகளில் விண்ணப்பங்களை அனுப்பி, நூலினைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இத் திருக்குறள் நூலில் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றுக்கு உரையும், காமத்துப் பாலுக்கு குறள் மட்டும் இடம்பெற்றுள்ளன. (ஐ-27)

### நூல்கள் வந்தன

நல்லூர், மார்ச் 12

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் கடந்த திங்கட்கிழமை வந்து சேர்ந்தன.

''ஆசியா பவுண்டேசன் நிறுவனம்'' இந்த நூல்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. (ஐ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய வெள்ளை பிறவுண் கலந்த 2 வயது பொமனேறியன் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. G. செல்வராசா, 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். [53961]

Doberman Pincher ஆண் நாய்க்குட்டி நான்கு மாதம் Liver Colour விற்பனைக்கு உண்டு. 12 மணிக்குப் பின் தொடர்பு கொள்க: T. T. சுகுமார், டச்சு வீதி, சீரணி, சண்டிலிப்பாய். [58999]

### ருஷ்ய மொழி

Russian For Beginners யாழ்ப்பாணத்திலேயே (நகருக்கண்மையில்) கற்பிக்கப்படும். பகுதி நேர / வார இறுதி வகுப்புகள் 29-03-98 இல் ஆரம்பம். குறைந்த கட்டணம், மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி சுயமுகவரிமுத்திரை கொண்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். Chekhov Centre, இல. 714, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [53979]

### தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்ப்பதற்குப் புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களை திருத்தி பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் (B. Sc) (Ceylon) Dip in Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி-3068]

### தேவை

நல்ல நிலையிலுள்ள லிஸ்டர் என்ஜினும் (Lister Engine), கிரைண்டர்களும் (Grinder) தேவை. மாலையில் தொடர்பு கொள்ளவும்; 57, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம். [53985]


**A/L 97**

(மீட்டல் வினா விடை)

DAY CLASSES

(சகல பாடங்களும் நடைபெறுகின்றன.)

ஆரம்பமாகிவிட்டன

**புதியஉயர்கல்லூரி**

ஆரியகுளம் சந்தி. யாழ்.

(53976)



**தேவை**

சகல பிஸ்கற் வேலைகளும் தெரிந்த பிஸ்கற் பாஸ் தேவை. 15-3-98-க்கு முன் தினமும் காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நேரில் வரவும். (தேவைப்படின் தங்குமிட வசதியும்உணவும் வழங்கப்படும்)

**றொலெக்ஸ் பேக் மாட்**

இல. 118, கஸ்தூரியார் வீதி' யாழ்ப்பாணம்.

(53974)


### கோழிக்குஞ்சுகள்

பதினைந்து நாள் வளர்ச்சியடைந்த பிறிமா கைலைன் பிறவுண்,வெள்ளைப்பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' மாக்கற் கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [53989]

### தவறிவிட்டது

இராமலிங்கம் அம்பிகைபாகன் என்பவரது 752150516V இலக்கமுடைய அடையாள அட்டை 09-3-98 இல் யாழ். நகரப்பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர் தயவு செய்து பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள 'கணேஸ் ஆட்ஸ்'' இல் ஒப்படைக்கவும். [53998]

### வீடு விற்பனைக்கு

74, குறுசோல்ற் வீதி, கண்டிக்குளியில் மூன்று படுக்கை அறை கொண்ட வசதியான வீடு விற்பனைக்கு உண்டு. (கச்சேரி, பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில்) உடன் குடியிருக்கலாம் தொடர்பு: திருமதி க. பாலசிங்கம், சிவலிங்கப்புளியடி, 457, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [539)3]

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

மானிப்பாய் கிழக்கு பாரதி சன சமூக நிலையத்தின் பொன் விழா இவ் வருடம் நடைபெறுவதை முன்னிட்டு இப் பகுதியைச் சேர்ந்த கால் ஊனமுற்ற ஒருவருக்கு முச்சக்கர சைக்கிள் வண்டியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. (ஐ-135)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05 — 01 — 1920

உதிர்வு: 21 — 02 — 1997

**அமரர் க. இ. ஆறுமுகம்**

திதி: 12-03-98

''ஆண்டுகள் எத்தனை தான் வந்தும் ஆற்றிடுமோ ஐயா எம் துயரை?

நினைவகலா:

குடும்பத்தினர்

டண்ணாகம். (சி/3080)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 — 01 — 1927

உதிர்வு: 10 — 03 — 1997

**திருமதி தர்மலிங்கம் சின்னத்தங்கம்**

திதி: 12—03—1998

நீங்கள் எம்மை விட்டு ஓராண்டு சென்றாலும் ஆறவில்லை எம்வேதனை! உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

''தர்ம வாசம்'',
பலாலி கிழக்கு, பலாலி. (53996)


**1st in Com., G. A. Q. 98|99**

யாழ். பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களை, விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

(53977) ஆரியகுளம் சந்தி, யாழ்.


# நாணயத் தொலைபேசிகள் அடிக்கடி மௌனம்!

உரும்பிராய், மார்ச் 12

யாழ். நகரத்தில் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நாணயத் தொலைபேசிகள் கடந்த சில வாரங்களாகச் சீராக இயங்கவில்லை.

சில தொலைபேசிகளின் அருகில் ''தொலைபேசி பழுதடைந்து விட்டது. பயன்படுத்த வேண்டாம்'' என்ற அறிவித்தல் காணப்படுகிறது. இதனால் மக்கள் தொலைபேசி வசதியைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தொலைபேசிகள் பொருத்தப்பட்ட இடங்களில் பெரும் எண்ணிக்கையானோர் தினமும் காத்திருப்பதைக் காண முடிகிறது. (ஐ-154)

# கல்லூரியிலும் ராகிங்; மாணவன்ஆஸ்பத்திரியில்!

## அம்பாறையில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 12

அம்பாறையில் பகிடிவதைக்கு உள்ளான மற்றுமொரு மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை சத்ததிஸ்ஸ மகாவித்தியாலயத்தில் 11ஆம் ஆண்டில் சேர்ந்த மாணவன் ஒருவரை 13 ஆம் ஆண்டு மாணவர்கள் ஐவர் பகிடிவதைக்கு உள்ளாக்கியதாகவும் —

இதனால் அந்த மாணவன் தலையிலும், தோளிலும் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பகிடிவதையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 5 மாணவர்களை அம்பாறை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் ஒருவர் பகிடிவதைக்குள்ளாகி மரணமான சம்பவம் அண்மையில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10-3)

# இசை ஆசிரியர்களுக்கு கோட்ட ரீதியாகக் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, மார்ச் 12

யாழ்ப்பாண கல்வி வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புகளில் இசை ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்கான சேவைக்கால கருத்தரங்குகள் கோட்ட ரீதியாக நடைபெற உள்ளன.

பின்வரும் திகதிகளில் குறிக்கப்பட்ட பாடசாலைகளில் இக்கருத்தரங்கு நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 21 ஆம் திகதி தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும்—

மார்ச் மாதம் 22 ஆம் திகதி சங்கானை, சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் —

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி கோட்ட ஆசிரியர்களுக்கு மார்ச் மாதம் 28 ஆம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியிலும் இக்கருத்தரங்குகள் நடைபெறும். (ஐ-152)

# ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு, மார்ச் 12

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற உள்ள ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு தினம் இம் மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

பாடசாலை பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர் மூலமாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பதிவுத் தபால் மூலம் பரீட்சை ஆணையாளருக்கும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும், விண்ணப்ப உறையின் இடது பக்க மேல் மூலையில் புதிய பாடத்திட்டமா பழைய பாடத்திட்டமா என்பதை தவறாது குறித்து அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் ஏ. எம். ஆர். பி. அமரக்கோன் அறிவித்துள்ளார். (ஐ-152)

# கொட்டாஞ்சேனையில் தமிழர்கள் பலர் கைது

கொழும்பு, மார்ச் 12

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் கடந்த சில நாள்களாக பொலீஸார் வீடு வீடாகத் தேடுதல் நடத்தி சந்தேகத்திற்குரிய தமிழ் இளைஞர்களையும்,யுவதிகளையும் கைது செய்து வருகின்றனர்,

இதேவேளை கடந்த வாரம் இப் பகுதியிலுள்ள இரு தனியார் விடுதிகளில் தங்கியிருந்த 35 தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ - 5)

# நெடுந்தீவு ஆலயத்தை புனரமைக்கக்கோரிக்கை

நெடுந்தீவு, மார்ச் 12

நெடுந்தீவு கிழக்கு மாவிலித்துறை அருள்மிகு பிடாரி அம்பாள் ஆலய புனரமைப்புப் பணிகளுக்கு நிதி உதவியளிக்குமாறு மேற்படி ஆலய அறங்காவல்சபை யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் இக் கோயிலின் சில பகுதிகள் மக்களின் இடப்பெயர்வையடுத்து இடிந்து சேதமுற்றுக் காணப்பட்டன.

நெடுந்தீவு இறங்குதுறையில் இது அமைந்துள்ளதால் பிரதான ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் இந்த ஆலயத்தைப் புனரமைக்க சுமார் பத்து லட்சம் ரூபா வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அறங்காவலர் சபைத் தலைவர் வே. சுந்தரலிங்கம் கூறினார். (ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போர் இலக்கம்: இரண்டு

ஜனாதிபதி கொலை முயற்சி வழக்கில் சந்தேக நபராகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ள சின்னத்துரை முகுந்தன் களுத்துறை நீதிமன்றத்தில் தெரிவித்த தகவல்கள் இந்த நாட்டில் தமிழர்களின் நிலை எவ்வளவு கேவலமடைந்துள்ளது என்பதற்கு ஓர் உதாரணம்.

தமிழர்கள் சம்பந்தப்பட்ட விடயம் என்றால் அரசாங்க அதிகாரிகள் எவ்வாறு அக்கறை இல்லாது செயற்படுகின்றார்கள் என்பது அத்தகவல்கள் மூலம் துலாம்பரமாகிறது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டதாகவும், மேற் குறிப்பிட்ட வழக்கு விசாரணை மூடிந்து தமக்குச் சாதகமான நிலை உருவாகி வரும் வேளையில், தமக்கு எதிராக சட்டமா அதிபர் மேலும் ஐந்து வழக்குகளை தொடுத்ததாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அதாவது குறிப்பிட்ட வழக்கில் அவர் குற்றவாளியாகிறாரோ சுற்றவாளியாகிறாரோ எந்நிலையிலும் அவரை வெளியே செல்ல விடாது சிறையிலேயே வைத்திருக்க வேண்டும் என்ற வீம்புத்தனம் அதிகாரிகளுக்கு!

வழக்கு விசாரணைகளின் போது சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் மிகப் பல தடவைகள் சமுமளிக்காதிருந்துள்ளனர். சந்தேகநபர் குற்றவாளியல்ல என்றால் அவர் எவ்வளவு விரைவில் விடுவிக்கப்படுகிறாரோ அப்போது தான் நீதி உண்மையாக நிலை நாட்டப்படும்.

பொதுவாகவே இலங்கையில் வழக்குகள் குறுகிய கால எல்லைக்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்கப்படுவதில்லை என்ற குறைபாடு உண்டு. தமிழர்களைப் பொறுத்தவரையில் வழக்குத் தொடரப்படாமலே வருடக்கணக்காகச் சிறைகளில் அடைத்து வைக்கப்படுகிறார்கள்.

"எம்மீது வழக்குத் தொடருங்கள்; அல்லதுவிடுவியுங்கள்" என்று பல நூற்றுக்கணக்கானோர் பல தடவைகள் உண்ணாவிரதம் இருந்த போதிலும், வெறும் வாக்குறுதிகளோடு அதிகாரிகள் சமாளித்து விடுகின்றனர்.

அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச் சட்டமும் நினைத்த மாத்திரத்தே தமிழர்களை சந்தேக நபர்களாக்கவும், சந்தேகப் பிராணிகளாக்கவும் அரச அதிகாரிகளுக்குத் தாராளமாக கைகொடுத்து உதவுகின்றன!

வடக்கு — கிழக்கு மாநிலத்தில் போரினால் தமிழ் மக்கள் அவலமுறுவது ஒரு புறமிருக்க, சாமான்யனுக்குரிய வாழ்க்கையை நடத்துவதற்குத் திண்டாடுவது இன்னொரு புறமிருக்க —

அவசர காலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும் தமது கொடிய பற்களால் இரண்டாவது போரைத் தமிழர்கள் மீது ஒரு தலைப்பட்சமாக தொடர்ச்சியாக நடத்தி வருகின்றன. ஏதும் அறியாத அப்பாவித் தமிழர்கள் கூட அந்தக் கொடிய பற்களால் மனிதாபிமானமற்ற முறையில் கடித்துத் துன்புறுத்தப் படுகிறார்கள். இந்த இரண்டாவது போர் எப்போது நிறுத்தப்படும்?

# தமிழருக்கு மரபு வழித் தாயகம் இருப்பதால்
# தேசிய இனம் என்று நிறுவியவர் தந்தை செல்வா

(01-03-98 உதயன் இதழில் வெளியான கட்டுரையின் இரண்டாவது பாகம் இது)

ஆயினும் தேசிய தனித்துவம் மட்டுமே போதுமானதல்ல. ஆள்புலம் இல்லாத மக்கள் வெறுமனே சிதறிப் பரவிய ஒரு மக்கள் கூட்டமாகவே இருப்பர். எனவே, தமிழ் மக்களின் ஆள் புலமாக அவர்களது மரபுவழித் தாயகக் கோட்பாட்டை தந்தை செல்வா ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்துள்ளார். இத் தீவின் மூவேறு பிரதமர்களுடன் — பிராந்திய சபைகளுக்காக எஸ். டபிள்யூ. ஆர். டி, பண்டாரநாயக்காவுடனும்; மாவட்ட சபைகளுக்காக டல்லிசேனநாயக்காவுடனும் எழுத்து மூலமான இடைக்கால ஒப்பந்த ஆவணங்களாலும், 1960 ஜூலை பொதுத்தேர்தலில் தமது கட்சி பதவியில் அமர்த்தப்பட்டால் மறைந்த தமது கணவர் பண்டாரநாயக்கா கைச்சாதிட்ட 'பண்டா - செல்வா' உடன்படிக்கையைத் தமது அரசு நடைமுறைப்படுத்தும் என அவர் தமக்கு அளித்திருந்த வாய்மொழி உத்தரவாதத்தால் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும்— தாம் செய்துகொண்டிருந்த ஒப்பந்தங்களால் தமிழ் மக்களின் மரபு வழித் தாயகத்தை – ஆள்புலத்தை மூவரும் ஏற்று அங்கீகரிக்கும்படி செய்வதில் தந்தை செல்வா வெற்றி பெற்றிருந்தார்.

அவற்றின் பெறுபேறாக ஏற்று அங்கீகரிக்கப்பட்ட ஆள்புலமான மரபு வழித் தாயகத்தை உடையதமிழ் மக்களை ஒரு தேசிய இனம் எனும் அந்தஸ்துக்கும் உயர்ந்தியிருந்தார், இம்மாநிலமே வடக்கு — கிழக்கு மாகாணமாக அறியப்படும் இன்றைய யதார்த்தமாகும். தமிழர் மரபுவழித் தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கும் அதன் மாண்பிற்கும் ஊறுபாடு நேரிட அனுமதியாது காப்பதே தமிழ் மக்கள் தந்தை செல்வாவுக்குச் செய்யக் கூடிய உயர்ந்த கைம்மாறாகும்.

தமிழ்த் தேசியஇனமெனில் அது தந்தை செல்வாவையே குறிக்கும். மறுதலையாக தந்தை செல்வாவே தமிழ்த் தேசிய இனம் எனக் குறிப்பிட்டு மலையகத் தமிழ் தலைவர், தந்தை செல்வாவுக்குச் சூடிய பட்டமே 'மூதறிஞர் செல்வா'

16,000 அதிகப்படி பெரும்பான்மை வாக்குகளால் தமக்கு எதிராக அரசு நிறுத்திய வேட்பாளரை தந்தை செல்வா அந்த இடைத்தேர்தலில் தோற்கடித்ததும், முன் இருந்ததும் பின்னர் களத்திலே போத்துக்கேயரிடம் பறிகொடுக்கப்பட்டதுமான தமிழீழ அரசை மீள்விக்கப்போவதாகவே தந்தை சூளுரைத்திருந்தார்.

"காங்கேசன் துறை இடைத் தேர்தல் ஒரு பொது கருத்துக் கணிப்பே" எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் திரு. கரிகாலன் எழுதிய சிற்றேடு அரசியல் ஆய்வாளர் படித்துப் பயன்பெற வேண்டிய ஒரு நூலாகும்.

### தீர்மானம்

தேசிய அரசுப் பேரவைக்குச் சென்ற தந்தை, தமிழ் மக்கள் விடுதலை பெற்ற இனமாகவே வாழ்வார்கள்.

**தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுக் கட்டுரை**



ஆட்சியுரிமையைப் பெறுவதே அவர்களின் நோக்கம் எனக் கூறினார். அவரது தலைமையில் பன்னிரண்டு தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுமாகச்சேர்ந்து கையெழுத்திட்டு 1976 பெப்ரவரி 4 ஆம் திகதிக்குரிய தேசிய அரசுப் பேரவைக் குறிப்பேட்டில் இடம்பெற்றிருந்த பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்தனர்:–

"இலங்கையின் இருவேறு நாட்டினங்களான சிங்களவரும், தமிழரும் சுயநிர்ணய உரிமையுடையவர்களாதலின்,

"அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும்இன்றுவரை பிணைக்கப்பட்டுள்ளமையால், சுதந்திர இலங்கையின் அரசுகள் அனைத்தும், சிங்கள நாட்டினத்தினை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்குவித்து வளர்த்த அதன் பயனாக இப்போதுள்ள அரசமைப்பு ஒரு தலைப்பட்சமாகத் திணிக்கப்பட்டுத் தமிழ் நாட்டினம் ஆளப்படும் நாட்டினமாக்கப்பட்டுள்ளமையால்;

"காங்கேசன் துறை இடைத் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை, விடுதலை பெற்ற இறைமையுடைய மதச்சார்பற்ற சமதர்ம நாடானதமிழ் ஈழத்தை அமைப்பதற்குரிய ஆற்றலுரிமையாக ஏற்றுக் கொள்வதென இப் பேரவை தீர்மானிக்கின்றது" – என்பதாகும்.

தமிழர் ஐக்கியக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் 1976 மே 14 ஆம் திகதிஅகல் விரிவாக விடுக்கப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரகடனமானது மேற்படி தேசிய அரசுப் பேரவைத் தீர்மானத்தின் ஒரு முறையேற்பேயன்றி வேறல்ல.

ஆயினும் மேற்படி பிரகடனத்தையும், அதன் மீதான கொள்கை விளக்கவுரைகளையும் தொடர்பு சாதனங்கள் வெளியிடாதவாறு அரசு தணிக்கை மூலம் இருட்டடிப்புச் செய்திருந்தது. எனவே தந்தை செல்வா சாத்வீக சட்ட மீறுதலாக மேற்படி பிரகடனத்தை அச்சேற்றி பொது மக்கள் முன்

**சா. ஆ. தர்மரத்தினம்**

னிலையில் பகிரங்கமாகவே அதனை வாசித்திருந்தார். அதன் பொருட்டு தந்தை செல்வாவைக் கைது செய்யாத அரசு அதே சட்டமறுப்பில் தந்தை செல்வாவைத் தொடர்ந்து ஈடுபட்ட ஏனைய தமிழ் உறுப்பினர் நால்வரைக் கைது செய்து தேசத்துரோக குற்றஞ் சுமத்தி யூரர்கள் இல்லா நீதி மன்றம் முன் அவர்கள் மீது விசாரணை நடத்தியது. தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ் சட்டத்தரணிகள் அனைவரும் ஒரே குழாமாகத் தோற்றி அவர்களுக்காக வாதிட்டனர். ஈழத்தமிழர் இறைமை மீள்விக்கப்பட்ட பேருண்மையை உலகுக்குப் பறைசாற்றியது இவ் வழக்கின்பெறுபேறே!

1972 அரசமைக்கும் அதன் மீதான திருத்தங்களுக்குமான விவாதங்களிலும், வாக்கெடுப்புக்களிலும் கலந்து கொள்ளாது ஒதுங்கிக் கொண்டதன் மூலம் மீள்விக்கப்பட்ட ஈழத்தமிழர் உரிமை காவு போகாது தற்காத்துக்கொண்டவர் தந்தை செல்வா. அவரது நிலைப்பாடே இன்றுவரை பின்பற்றப்பட்டுவந்துள்ளது. 13-வது திருத்தம் கூட அதற்கு விதிவிலக்கல்ல. தந்தை செல்வாவின் இம் முன்மாதிரி தொடர்ந்தும் பின்பற்றப் படுமா?

### இறுதிஉரை

மேலும் தாம் இறப்பதற்கு முன்பாக தேசிய அரசுப் பேரவையில் தாம் நிகழ்த்தியுள்ள இறுதியுரையில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்;

"எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் தமக்கு என்று ஓர் அரசினை வைத்திருந்தார்கள். ஒரு சமஷ்டிக் கூட்டாட்சி யாப்புக்கான கோரிக்கையை நாம் கைவிட்டு விட்டோம். முற்றிலும் சாத்வீகமானதாகவே எங்கள் போராட்டம் அமையும். எப்போதோ ஒரு நாள் எங்கள் கோரிக்கையைச் சிங்கள மக்கள் வழங்குவர் என்பதனையும், இத் தீவின் ஏனைய பகுதியில் இருந்து முற்றிலும் புறம்பான ஒரு நாட்டை எம்மால் நிறுவ இயலும் என்பதனையும் நாம் அறிந்திருக்கிறோம்" — என்றார்.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி எங்ஙனம் அதனது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தவக்கால சிந்தனை

(16ஆம்நாள்)

"ஆபிரகாம் அவனை நோக்கி மகனே! வாழ்நாளில் உனக்கு இன்ப சுகமே கிடைத்தது. இலாசருக்கு துன்பதுயரமே கிடைத்தது. இதை நினைத்துப் பார். ஆனால் இப்பொழுது அவன் இங்கே ஆறுதல் அடைகிறான். நீயோ வேதனைப்படுகிறாய்."

இன்பத்தை அனுபவிக்கும் ஒவ்வொரு கணமும் துன்பத்தையும் எதிர்கொள்ள வேண்டும் என எண்ணிக்கொள். 'இவ்வுலகில் குறுக்கு வழிகளில் இன்பம் தேடும் மனித மனம் துன்பத்தை எதிர்கொள்ளத் தயங்கினாலும் அவை எமக்கு வந்தே தீரும் என்பதை இலாசருக்கு அளிக்கப் பட்ட ஆறுதல் வாழ்வு உதாரணம்.

நீங்களும் அனுபவிக்க துன்பத்தில் பங்கு கொள்ளும் மனநிலையில் மற்றவர்களுக்கு இன்பம் கொடுக்கும் செயல்களில் வாழ்வால், வார்த்தையால் எம்மை நாம் பகிர அழைப்பு விடும் காலமே இத்தவத்தின் காலம்.

இதை உணர்ந்தால் உன்னாலும் முடியும் உன் சூழலில், உன் குடும்பத்தில் உன் செயல்கள் மற்றவனுக்கு வாழ்வளிக்க மகிழ்வூட்ட என்ன வகையில் செயற்படுவாயா? தீர்மானம் உன்னுடையதே.

-யோசப்பாலா-

## சாயி சிந்தனை

திரும்பிப் போவதற்கு வேண்டிய பயணச் சீட்டையும் கையில் வைத்துக் கொண்டு தான் மனிதன் பிறக்கின்றான். இங்கே உழைக்கிறான்; செலவழிக்கிறான்; மேலெழுகிறான்; வீழ்கிறான்; பாடுகிறான்; ஆடுகிறான்; அழுகிறான்; புலம்புகிறான். வந்த பயணம் முடிவதைப் பற்றி யோசிப்பதில்லை.

அதை மறந்து போனாலும், வாழ்க்கை வண்டி போகும் இடத்தை- சுடுகாட்டை– நோக்கிப் போய்க் கொண்டே இருக்கிறது. தன்வசமிழந்து பிறப்பு, இறப்பு என்ற சக்கரத்தில் கட்டுண்டு சூழல்வதில் மனிதனுக்கு மதிப்பு என்ன இருக்கின்றது? சிக்குண்ட இச்சக்கரத்தில் கிடந்து உழலாமல் தன்னை விடுவித்துக் கொள்வதே மனிதனுக்குப் புகழும், பெருமையுமாகும்.

மரணம் வாழ்வைக் கிள்ளி எறிந்து இன்னொரு பிறவியிலே தள்ள முதல் சாதனைகள் செய்து மறைபொருளாயுள்ள ஆத்மாவை மனிதன் அறிந்து கொள்ள வேண்டும். மரணம் வரும் போது மகிழ்ச்சியோடு அதை சந்திக்க வேண்டும். பிறக்கும் போது அழுபவன் இறக்கும் போது அழக்கூடாது. மரணத்தை வெற்றி கொண்டவனாய் இறக்க வேண்டும்.

இல்லையேல் அவன் இங்கு கண்டதெல்லாம் பூமிக்குப் பாரமாய் இருந்து, தொன் கணக்கில் உணவைத் தின்று தீர்த்ததாகத்தான் முடியும். இந்த நிலையில் துன்பத்திலிருந்தும் துயரத்திலிருந்தும் தப்பவே முடியாது.

(ஆதாரம்: Voice of Avatar)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதயவாக்கு

சின்னஞ்சிறு செலவுகளைப் பற்றியும் கவனமாக இருங்கள். அடித்தளத்திலுள்ள சிறு ஓட்டை ஒரு பெரிய கப்பலையே மூழ்கடித்து விடலாம்.

- பெஞ்சமின் பிராங்ளின்

## நாளை

மாசி 29

வெள்ளிக்கிழமை

திதி: பூரணை

முற்பகல்: 10-16 வரை

நட்சத்திரம்: உத்தரம்

முழுநாளும்

திருவள்ளுவர் குருபூசை

சுபநேரம்: 6.22 – 7. 52

ராகு காலம்: 10.52–12.22

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

# பாரதீய ஜனதாக்கட்சி நிலையான அரசமைக்கும்

## வாஜ்பாய் நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 12

நிலையான அரசை அமைக்க முடியும் என்று பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் அடல்பிஹாரி வாஜ்பாய்தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 252 உறுப்பினர்களின் ஆதரவு எமக்கு உண்டு. இது தவிர ஹரியானா லோக்தள் கட்சியைச்சேர்ந்த நால்வரினதும், அருணாச்சல் காங்கிரஸைச் சேர்ந்த இருவரினதும் மற்றும் சுயேச்சைகள் மூவரினதுமாக மொத்தம் 9 பேரின் ஆதரவும் எமக்கு கிடைக்கும். அத்துடன் வடகிழக்குப் பிராந்தியத்தின் வேறு சில உறுப்பினர்களின் ஆதரவுடனும் நிலையான அரசை அமைக்க எங்களால் முடியும் — என்று வாஜ்பாய் செய்தியாளர்களிடம் கூறினார்.

543 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் 539 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்து 252 இடங்களைக் கைப்பற்றியுள்ளன. மேலும் சில உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்ததை அடுத்து பாரதீய ஜனதாவின் பலம் தற்போது 261 ஆக உயர்ந்துள்ளது.

ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சி எடுக்கும் முடிவைப் பொறுத்தே பாரதீய ஜனதாக் கட்சியின் பெரும்பான்மை பலம் அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அரசியல் சூழ் நிலையில் ஐக்கிய முன்னணியில் உள்ள உறுப்புக் கட்சிகள் மூன்று வெவ்வேறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் தலைமையிலான மதசார்பற்ற கூட்டரசு ஒன்றுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஒரு சாராரும்—

நடுநிலை பேணப்பட வேண்டும் என்று மற்றொரு சாராரும் விரும்புகின்றனர்.

மூன்றாவது அணியினர்காங்கிரஸ் ஆதரவுடன் ஐக்கிய முன்னணி தலைமையில்அரசு அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

(ஐ)

## பி. ஜே. பி. அரசமைப்பதைத் தடுக்க விஷம் அருந்தவும் தயார்

### லாலு பிரசாத் கூறுகிறார்

மத்தியில் பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி அமைப்பதைத் தடுப்பதற்காக தாம் விஷம் அருந்தவும் தயார் என்று பீஹார் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.



மீண்டும் ஐக்கிய முன்னணியில் சேர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா என்று அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட போதே அவர் முன் கண்டவாறு பதிலளித்தார்.

பீஹார் மாநிலத்தில் இடம்பெற்ற பல கோடி ரூபா கால்நடைத் தீவன ஊழலில் சம்பந்தப்பட்டதாகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதை அடுத்து எழுந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக லாலுபிரசாத் யாதவ் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகி தனிக் கட்சி அமைத்தார். முன்னர் ஜனதாதள் கட்சியில் அவர்இணைந்திருந்தார்.

## நீதிமன்றம் தள்ளுபடி

கோவை தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து அல் உமா என்ற இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் மீது தமிழக அரசு விதித்த தடை உத்தரவு செல்லுபடியாகாதது என்று அறிவிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி நிலையிலேயே தள்ளுபடி செய்துவிட்டது.

அல் உமா, அகில இந்திய ஜிகாத் குழு ஆகிய இரு அமைப்புகளையும் தமிழரசு தடைசெய்தது தெரிந்ததே.

## அணுக்கழிவு...

(மூன்றாம் பக்கத் தொடர்)

மீண்டும் ஜப்பானுக்குள எடுத்து வரப்பட்டன.

இந்த அணுக் கழிவுகளில் அடங்கியுள்ள சில பொருள்கள் முற்றாக அழிவதற்கு பல கோடி ஆண்டுகள் கூட எடுக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானில் அணுக் கழிவுகள் சேகரிக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதம் அளிக்கப்படும் வரை தாம் இதற்கு அனுமதி வழங்க முடியாது என்று ஆளுநர் ஹிமோரா தெரிவித்தார்:

ஜப்பான் தனது மின்சாரத் தேவையின் மூன்றில் இரண்டு பங்கை அணுசக்தி மூலமே பெறுகிறது. ஆனால் அனு உலைகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட விபத்துச் சம்பவங்கள் அணுச்சக்தி தொடர்பான பாதுகாப்பில் அச்சத்தை உருவாக்கியுள்ளன.

அணுக் கழிவுகளைப் பதப்படுத்தும் ,தொழிற்சாலைகள் ஜப்பானில் இல்லை. எனவே அனைத்து கழிவுகளும் பதப்படுத்தப்படுவதற்காக பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு கப்பல்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

கடந்த 1995 மற்றும் 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் இது போன்று பதப்படுத்தப்பட்ட அணுக் கழிவுகள் ஜப்பானின் வடபகுதிக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட போது கடும் எதிர்ப்புகளுடனேயே அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

## தமிழர்...

(ஏழாம் பக்கத் தொடர்)

குறிக்கோளை அடையப் போகிறது? என்று ''கார்டியன்' 'பத்திரிகை நிருபர் வால்ட்டர் சுபாஸ் கேள்வி எழுப்பிய போது—

சிங்கள மக்கள் எங்களை வெளியே எறிந்துவிடுவார்கள். அந்த அளவுக்கு தொல்லை தருபவர்களாக எங்களை நாம் ஆக்கிக் கொள்ளுவோம்— என்று தீர்க்கதரிசனமாகப் பதிலளித்தார் தந்தை செல்வா.

( முற்றும் ) ★

## அதிபர்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

ஆபிரிக்க இராணுவம் இராணுவ ஆட்சியாளர்களை விரட்டி மீளவும் சியராலியோனைக் கைப்பற்றியுள்ளது.

ஏறத்தாழ 1 லட்சம் பேர் மீள நாடு திரும்புவார்கள் என்று அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஆணையாளரின் பேச்சாளர் கூறினார்.

(ஐ-7)




தரமான முறையில் குறைந்த கட்டணத்தில்

▶ போட்டோ பிரதிகள்

▶ லமினேட்டிங் (கவரிடுதல்)

நாடவேண்டிய இடம்:

அருண்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



கட்டட ஆலோசனைகள்

பொறியியல் நுணுக்கங்கள் பேணப்படின் கட்டடங்கள் உறுதியாகவும், குறைந்த செலவிலும், வசதியாகவும், அமைப்பாகவும் அமையலாம்.

ஆலோசனைகளுக்கு எம்முடன் தொடர்பு கொள்க:

K. தனசேகரம்,
C/o K. கார்த்திகேசு,
உடுவில் கிழக்கு, உடுவில்.

(54004)


# "எஸ் - லோன்" பைப் குண்டுடன் லொறி கொழும்புக்கு வருகிறதாம்

கொழும்பு, மார்ச் 12

கொழும்பில் இரு முக்கிய இடங்களை இலக்கு வைத்து தாக்குவதற்காக விடுதலைப் புலிகளின் குண்டு பொருத்தப்பட்ட இரு லொறிகள் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டுள்ளன என பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்,

இவற்றில் ஒரு லொறி கொழும்பை அண்மித்துள்ளதாகவும் அந்த லொறியில் ''எஸ் லோன்'' பைப்புகளில் வெடிமருந்துகள் நிரப்பப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினரே இந்தத் தகவல்களை வழங்கியுள்ளார். 'லங்காதீப' பத்திரிகை வெளியிட்ட செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## கொட்டடி சந்தையில் துர்நாற்றம் வீசுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 12

கொட்டடி மீன் சந்தைப் பகுதியில் வீசும் துர் நாற்றத்தால் மீன் சந்தைக்கு வருவோர் மூக்கை பொத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மீன் சந்தை சரிவரகட்டி முடிக்கப்படாமல் இருப்பதே இதற்கான காரணம் என்று அறியவருகிறது. நிலம் சிமெந்து இடப்பட்டு ஏனைய மீன் சந்தைகளைப் போல் தினசரி கழுவிப்பராமரிக்காமல் காணப்படுகின்றது.

மீன் வெட்டும் கழிவுகளும் மீன் கழுவும் நீரும் சந்தை நிலத்தில் தேங்கி சேறும் சகதியுமாக இருப்பது துர்நாற்றம் வீசுவதற்கு மற்றுமொரு காரணம் என்று கூறப்படுகிறது.

கொட்டடி மீன் சந்தையில் தற்போது மாலை நேர மீன் வியாபாரம் களைகட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-4)


முதலாம் தவணைப் பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 1 முதல்
O/L வரை
15-3-98 ஞாயிறு
22-3-98 ஞாயிறு
காலை 8 மணி— 5-00மணி

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.

நாவலர்
கல்வி நிலையம்
[illegible]
யாழ்ப்பாணம்.

(54500)


## முத்திரை வகைகள் இன்று வருகின்றன

யாழ்ப்பாணம் மார்ச் 12

யாழ். குடா நாட்டில் நிலவும் முத்திரைத் தட்டுப்பாட்டினை நீக்கும் வகையில் குடா நாட்டிலுள்ள 17 தபாலகங்களுக்கான முத்திரை வகைகள் இன்று வியாழக்கிழமை விமானம் மூலம் எடுத்து வரப்படுகின்றன.

யாழ்ப்பாணம், கோப்பாய், பண்டத்தரிப்பு, சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம், வட்டுக்கோட்டை, சுன்னாகம், உரும்பிராய், காரைநகர், கரவெட்டி, தெல்லிப்பளை, வல்வெட்டித்துறை, வேலணை, மானிப்பாய், சுழிபுரம், பளை ஆகிய தபாலகங்களுக்கான முத்திரைகளே இன்று எடுத்துவரப்படுவதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அலுவலகம் தெரிவித்தது.

(ஐ-7)

## செல்வா நூற்றாண்டை ஒட்டி மாணவருக்கு வழங்க பரிசில்கள் அன்பளிப்பு

தந்தைசெல்வா நூற்றாண்டினையொட்டி அவரது ஞாபகார்த்தமாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்குரிய பரிசில்களை வழங்கி வருகிறது.

நீர்வேலி சி. சி. ரி. எம். எஸ்., நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி, அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, யாழ். மத்தியகல்லூரி (ஆரம்பபிரிவு) போன்ற பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கு மேற்படி அமைப்பினால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

மேலும் பல பாடசாலைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக இந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராசா தெரிவித்தார்.

(ஐ-5)


வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

அறிவித்தல்

இயக்குநர் சபை தேர்தல் 1998 ஏப்ரல் மாதம் நடைபெற இருப்பதால் சகல கிளைக்குழு தலைவர்/செயலாளர்களை சங்க உறுப்பினர்களின் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கால்நடை வைத்திய கந்தோர் புலோலியில் 19-03-98 தொடக்கம் 21 - 03 - 98 வரை காரியாலய நேரத்தில் சமுகம் கொடுத்து பதிவு செய்து கொள்ளவும்.

– தலைவர்

(54003)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னை விழுந்து ஒருவர் பலி!

சாவகச்சேரி, மார்ச் 12

தென்னையில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தென்னை மரம் முறிந்ததனால் தென்னையுடன் நிலத்தில் வீழ்ந்து பரிதாபமாக மரணமானார்.

இச்சம்பவம் மட்டுவில் தெற்கு சிவன்கோயில் வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மணிவண்ணன் என அழைக்கப்படும் பூதன் சின்னத்தம்பி (வயது 35) என்பவரே மரணமானவர் ஆவார்.

சாவகச்சேரி திடீர் மரவிசாரணை அதிகாரி நா.தர்மேந்திரர்விசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் ஜெயதிலகா சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

(இ-31-117)

## பாதிப்பு

தென்மராட்சி, மார்ச் 12

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி தெற்கு, மருதங்கேணி வடக்கு ஆகிய பகுதிகளில் இருந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகள் இன்னமும் இயங்கத் தொடங்காததால் இப்பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒரு மைலுக்கு அப்பால் உள்ள தாளையடியில் உள்ள இணைக் கடைக்கே செல்லும் நிலையில் இருந்து வருகின்றனர்.

(இ-117)

# யாழ்.நகரைக் கட்டி எழுப்பும் பாரிய பொறுப்பு என்னிடம்

### புதிய மேயர் நேற்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச், 12

''யாழ். நகரத்தைக் கட்டி எழுப்பும் பாரிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது இந்தப் பணியில் நான் எந்த வகையில் தகுதியுள்ளவர் என்பதை காலப்போக்கில்அறிவீர்கள்''

இப்படி யாழ். மாநகர மேயராகப் பதவியேற்ற திருமதி சறோஜினிதேவி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மேயர் பதவி ஏற்பு வைபவத்தில் பேசுகையில் அவர் தெரிவித்ததாவது:

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவு செய்தமைக்காக நன்றி கூறுகிறோம்.

போரால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். நகர மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எமது முதல் பணியாக இருக்கும். அதன் பின்பே புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளில் கவனம் செலுத்தப்படும்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு அதிகாரங்களே உள்ளன. அந்த அதிகாரங்களுடன் எம்மால் முடிந்தளவு பணி புரிவோம்.

இங்கு வந்தபோது மக்கள் பல தரப்பட்ட பிரச்சினைகளை எம்மிடம் தெரிவித்தனர்.

வேலைவாய்ப்பு, உடைந்த வீடுகளுக்கு உதவி, காணாமற் போனவர்களின் விடுதலை போன்ற பிரச்சினைகளை எமக்குத் தெரிவித்தனர்.

மாநகர சபை அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாக இந்தப் பிரச்சினைகள் இருந்த போதும், மனிதாபிமான அடிப்படையில் அவற்றுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்போம்.

யாழ். மாநகர சபையின் கட்டடம், நகரமண்டபம் ஆகியவற்றை மீளக்கைப்பற்ற அரசாங்கமும், அரச சார்பற்ற அமைப்புக்களும் உதவி செய்ய வேண்டும்.

காணாமற் போனோர் விடயம் பெரியவிடயம். இந்த விடயம் தொடர்பாக தம்மைச் சந்தித்த தூதுக்குழுவிடம் சுதந்திர ஆணைக்குழு அமைத்து ஆறு மாத காலத்தில் அறிக்கை வெளியிடப்படும் என்று ஜனாதிபதி உறுதி கூறியிருந்தார். ஆனால் இது வரை ஆணைக்குழு நியமிக்கப்படவும் இல்லை; விசாரணை அறிக்கை வெளியாகவும் இல்லை.

முக்கிய விடயமான இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதி பதில் அளிக்கவேண்டும்.

யாழ். நகரப்பகுதியில் நிலவும் மின் விநியோக சீர்கேடு நீக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து எம்மைப் பிரிந்த முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவது சகலரதும் கடமையாகும். எமது சகோதரர்களான அவர்களை அன்னியப்படுத்தாமல் அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியது அவசியம்.

இப்படி அவர் கூறினார்.

(இ-3)

## உள்ளக பயிற்சிக்கு அறுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். பல்கலைக்கழக வைத்தியபீடத்தில் இருந்து இறுதிப் பரீட்சையில் தேறிய 60 பேரில் ஆறு பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிலுநர் டாக்டர்களாக பயிற்சி பெற நியமிக்கப்பட்டுள்ளனர்.

ச. சூரியகுமாரன், வ. சுதாகரன், ச. தேவகுமார், செல்வி எச். தம்பாபிள்ளை செல்வி ரி. குமரகுருநாதன், செல்வி ஆர். பொன்னையா ஆகியோரே இந்த அறுவரும் ஆவர்.

(இ-15)

# ஆங்கில பயிற்சி நெறிக்கு போதனாசிரியர் தெரிவு

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களத்தின் அநுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள ஆங்கில பயிற்சி நெறிக்கு போதனாசிரியர்கள் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர்.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும்—

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் யாழ்.பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் — யாழ். பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(இ-3)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 12

திருநெல்வேலி இ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் க. ஜெயானந்தன் தலைமையில் நடைபெறும்.

போட்டி முடிவில் 1995, 1997 இல் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

(இ-4)

## பத்திரிகையாளர் நவரத்ன காலமானார்

கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் பிரபல மூத்த பத்திரிகையாளர் காமினி நவரத்ன நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

இவர்கடந்த ஐம்பது வருட காலமாக தலைசிறந்த ஆங்கிலப் பத்திரிகையாளராக விளங்கினார்.

'' ரைம்ஸ் ஒவ் சிலோன்'' ''சன்'' ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளில் பணியாற்றிய போது இவர் புகழ் பூத்த பத்திரிகையாளராகத் திகழ்ந்தார்.

சிலகாலம் தமது சொந்தத்தில் செய்திச் சேவையை (சந்தேசய) நடத்திய இவர் பல வெளிநாட்டுப் பத்திரிகைகளின் செய்தியாளராகப் பணிபுரிந்தவர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடப்பட்ட 'சற்றர்டே ரிவியு' ஆங்கில வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

அவ்வேளை அவர் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்து எழுதிவந்தார். அப்போதெல்லாம் இராணுவத்தின் பயமுறுத்தலுக்கு இடையிலும் அவர் துணிச்சலாக எழுதினார்.

பிரம்மச்சாரியான அவரின் இறுதிக் கிரியைகள் அவரது விருப்பப்படி இறந்த அன்றைய தினமே நடைபெற்றன.

(அ)

## சமய சந்நிதியில்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்தும் மாதாந்த பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று காலை 8 மணிக்கு வண்ணை கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பன்னிரு திருமுறைப் பாராயணமும், அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகளும், சுமங்கலி பூசை முதலியனவும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

(ஐ-7)

# ஐக்கியசோஷலிசக்கட்சிஎன்ற பெயரில் புதிய கட்சி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 12

சோஷலிசக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிறுவப்பட்டுள்ள ஐக்கிய சோஷலிசக் கட்சியின் செயலாளர் நாயகமாக ஸ்ரீசிங்க ஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அவர் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றுகையில், தனது கட்சியின் பதிவுபற்றி தேர்தல் ஆணையாளருடன் கலந்துரையாடி வருவதாகத் தெரிவித்தார்.

இனவாதகொள்கைகளைப் பின்பற்றும் எந்தவொரு கட்சிக்கும் தமது கட்சி ஆதரவு வழங்கமாட்டாது என்றும் அவர் கூறினார்.

வடக்கு—கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரசாங்கமும் எதிர்க்கட்சியும் பின் பற்றி வரும் கொள்கைகளை அவர் கண்டித்தார்.

தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு யோசனைகள் முன் வைக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கு இடமளிக்கும் யோசனை ஒனறு முன்வைக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

உலகில் சோஷலிசப்பாதை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மாணவர்களால் கல்விஉலகுபெருமைபெற்றது

### மாகாணப் பணிப்பாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம், மார்ச். 12

யாழ்ப்பாண மாணவர்களால்கல்விஉலகம் பெருமை பெற்றது. இடம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற போதும் எமது மாணவர்கள் கல்வியில் சிறப்புற்று விளங்குகிறார்கள்.

வேம்படி மகளிர் கல்லூரியில் உள்ளக தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை இணைப்பை ஆரம்பித்து வைத்துப் பேசிய மாகாண கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முற்பகல் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இடிந்த கட்டடங்களையும் இடிபாடுகளினால் மலை போலக் குவிந்து காணப்படும் கற்கு வியல்களையும் கொண்டு எமது பாடசாலைகள் இயங்கினாலும் மாணவர்கள் மனம் தளராமல் கற்று வருகின்றனர். கல்வி உலகில் யாழ். மாணவர்களைப் போல் சிறந்த மாணவர்களைக் காண முடியாது.

கடினமான சூழ்நிலையில் இருந்து தப்பி இன்று பாடசாலைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. கல்வியில் மெல்ல மெல்ல சுறுசுறுப்பு ஏற்பட்டு வருகிறது. மாணவர்கள் பாடசாலைக்கு கிரமமாக சமுகமளித்து வருகிறார்கள்.

மாணவர்கள் பாடங்களோடும் பரீட்சைகளோடும் நிற்கக் கூடாது. முழுமையான கல்வியைப் பெற வேண்டுமானால் ஏனைய துறைகளிலும் ஈடுபட வேண்டும்— என்று தெரிவித்தார்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலம் தனது தலைமையுரையின்போது கூறியதாவது;-

பாடசாலையின் உயர்ச்சிக்கும், செயற்பாட்டிற்கும் ஏற்ப பரிவர்த்தனைத் தொடர்பு அவசியமானது. அதி உயர் தன்னியக்க தொலைபேசி இணைப்பு எமது பாடசாலக்கு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து வகுப்புகளுடனும் உடனுக்குடன் தொடர்புகொள்ள முடியும். இந்த உள்ளக தொலைபேசி இணைப்பு பாடசாலைகளுக்கு இன்றியமையாதது — என்று கூறினார்.

எலக்றோனிக் எஞ்ஜினியரிங் நிறுவனஅதிகாரி ஜீ.சயந்தன் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

இப் பாடசாலையில் தற்போது உள்ளக தொலைபேசி இணைப்பு மட்டும் வழங்கப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் முழு உலகத்துடனும் தொடர்பினை ஏற்படுத்தும் வகையில் கொம்பியூட்டர், ஈமெயில், இன்ரநெற் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். யாழ். மாவட்டத்தில் ஏனைய பாடசாலைகளுக்கும் உள்ளக தொலைபேசி இணைப்பு வழங்கப்படும்— என்று கூறினார்.

கோட்டக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அருளானந்தம், மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பவளகாந்தன், பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் எஸ். கனகரத்தினம் மற்றும் றெலிக்கொம், எலக்றோனிக் எஞ்ஜினியறிங் நிறுவன அதிகாரிகளும் இந் நிகழ்வு வைபவத்தில்கலந்துகொண்டனர்.

## விவசாய இணைப்புகுழு கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

பளைப் பிரதேச விவசாய இணைப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்துக்கு விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள், செயலாளர்கள், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

(இ-100)

# மருதானை குண்டுவெடிப்பு சப் இன்ஸ்பெக்டர் கைது!

கொழும்பு,மார்ச் 12

மருதானைக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக கல்கிசைப் பொலீஸைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவித்தது.

மருதானைக் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்ட மினி பஸ்ஸில் குண்டு பொருத்துவதற்கு இந்த சப் இன்ஸ்பெக்டர் பாதுகாப்பு வழங்கினார் எனச் சந்தேகப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கைதான சப் இன்ஸ்பெக்டரைச் சந்திக்க குண்டு வெடிப்பு சூத்திரதாரி கல்கிசை பொலீஸ் நிலையத்துக்கு வந்துபோன சாத்தியம் உள்ளது—இப்படி வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

(இ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்)
சட்டத்தரணியும், சமாதான நீதிவானுமாகிய க. கேசவன் முன்னிலையில் முதலில் மேயர் பதவிப் பிரமாணம் செய்தார்.

அதன் பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணியை சேர்ந்த உதவி மேயர் தம்பிராசா திருநாவுக்கரசுஉறுப்பினர்களான செல்வன் கந்தையா, செல்லையா விஜயரத்தினம், அந்தோனிப்பிள்ளை பிலிப், சிவராசா கௌதசுதன், திருமதி டொறன்றா எஸ்பிரியல், வல்லிபுரம் பரமசிவம் ஆகியோரும் —

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பைச்சேர்ந்த மனுவல் பிள்ளை மங்கள நேசனும் — பதவிப்பிரமாணம் செய்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவான மற்ற உறுப்பினரான ஆசீர்வாதம் கைதான் நிக்கலஸ் நேற்று பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

ஈ. பி. டி. பி. அமைப்பினர் இந்த நிகழ்வில் பங்கு பற்றவில்லை. புளொட் பிரதிநிதிகள் பங்குபற்றிய போதும் அந்த அமைப்பின் சார்பில் தெரிவான உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்யவில்லை.

அதையடுத்து யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் சார்பில் அருட்திரு. செல்வராஜா. தென்இந்திய திருச்சபையைச் சேர்ந்த சூசைதாசன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். நகர தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, உதவி மேயர் திருநாவுக்கரசு, ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் மங்கள நேசன், புளொட் அமைப்பின் பிரதிநிதி இருதயராசா உட்படப் பலர் உரையாற்றினர். (இ-3)

## ஐக்கிய...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)
யில் வழிநடத்தும் சர்வதேச சக்தி தற்பொழுது வலிமை பெற்று வருகின்றது. தேசிய ரீதியிலும்சர்வதேச ரீதியிலும் புதிய நிலைமைக்கு முகம் கொடுப்பதே இக்கட்சியின் நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய சோஷலிசக் கட்சி இம்மாதம் 19 ஆம் திகதி வைபவ ரீதியாக கொழும்பு பொது நூலக மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


எமது புதிய வெளியீடுகள்!

கரண் - குஷ்பூ நடித்த
★ கலர் கனவுகள்

விக்ரம் - கரண் நடித்த
★ கண்களின் வார்த்தைகள்

சுரேஸ் - சௌந்தர்யா நடித்த
★ காதலைதிருடாதே

புதிய போஸ்டர்கள் விற்பனைக்குண்டு.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3092)


# ஜனாதிபதி-வாஜ்பாய் சந்திப்பு
# இறுதி நேரத்தில் ஒத்திவைப்பு!

## அ.தி.மு.க.கூட்டணி இன்னும் கடிதம் அனுப்பவில்லை

சென்னை, மார்ச் 12

மத்தியில் நிலையான அரசை அமைப்பதற்கு முடியும் என்ற தமது கோரிக்கையை வலியுறுத்தும் ஆவணங்களைப்பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஜனாதிபதியிடம் இன்று சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் ஆவணங்கள் அனைத்தும் முழுமையாகக் கிடைக்காமையால் அவர் ஜனாதிபதியைச் சந்திப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

சமதாக்கட்சி, லோக்சக்தி, அகாலிதன், பியுஜனதாதள், பிரணமூர், காங்கிரஸ், சிவசேனை, ஹரியானா விஹார் கட்சி ஆகியவற்றிடம் இருந்து ஆதரவுக் கடிதங்கள் ஏற்கனவே கிடைத்து விட்டன.

ஆனால் தமிழ் நாட்டைச் சேர்ந்த கூட்டணிக் கட்சிகளான பாட்டாளி மக்கள் கட்சி, ஜனதாக் கட்சி, தமிழக ராஜிவ் காங்கிரஸ், அ. இ. அ. தி. மு. க. ஆகியவற்றிடம் இருந்து கடிதங்கள் வந்து சேரவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் வெங்கைய நாயுடு நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார்.

இந்தக் கடிதங்கள் கிடைத்ததும் ஜனாதிபதியைச் சந்திக்க இருப்பதாகவும் —

உறுதியான ஓர் அரசை அமைப்பதோடு மக்களவையில் பெரும்பான்மையை நிரூபிப்பதாகவும்— அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டணிக் கட்சிகள் தவிர தெலுங்கு தேசக் கட்சியுடனோ வேறு எந்தக் கட்சியுடனோ பாரதீய ஜனதா முறைப்படி பேசவில்லை எனவும் அவர் சொன்னார். (இ-9)

## தமிழ்கட்சிகளை அரசியலில் இருந்து வெளியேற்றுமாறு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 12

''அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக ஏற்று அந்த இயக்கத்துக்கு எதிராகச் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட அவை முன்வராத பட்சத்தில் அவற்றை அரசில் இருந்து வெளியேற்ற வேண்டும்''

பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இந்த அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வைத்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஜாதிக சங்க சபாவின் தலைவர் மாதுலுவாவே சோபிதனேரர், இத்தாப்பாதே தம்மலங்கார தேரர் ஆகியோரே இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

''பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐ. தே. க. ஆகியன முன்வைத்துள்ளன தீர்வுத் திட்டங்களை எமது அமைப்பு முற்றாக நிராகரிக்கிறது. முக்கிய கட்சிகள் தேவையற்ற ஒரு விடயத்தில் தலையிடுகின்றன'' என்றும் அந்த மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-10)

## நிபந்தனைகளில் கச்சதீவும் ஒன்று

சென்னை, மார்ச் 12

''பாரதீய ஜனதா கட்சி அமைச்சரவையில் எமது கட்சி இடம்பெறுவதாயின் கச்சதீவை இந்தியாவின் ஒரு பகுதியாகக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கவேண்டும்.''

தமிழக முன்னாள் முதலமைச்சரும், அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

''கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. அது இலங்கையின் ஒரு பகுதியாக இருப்பதால் இந்திய மீனவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள்.'' என்று பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களிடம் ஜெயலலிதா எடுத்துக் கூறியுள்ளார். (இ-3-10)

## வலி. வடக்கில் ஸ்ரீ பாஸ்கரன்

யாழ்ப்பாணம், மார்ச் 12

வலி. வடக்கு பிரதேசசபை தலைவராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்த சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் நேற்று பதவிப் பிரமாணம் செய்தார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம்செய்துகொண்டார்.

பதவிப்பிரமாணம் செய்யச் சென்ற அவரை நீதிமன்ற வாசலில் வைத்து அவரது ஆதரவாளர்கள் மாலை அணிவித்தும், மலர்ச் செண்டு வழங்கியும் வரவேற்றனர்.

வலி.வடக்கு பிரதேச சபைக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவான ஏனைய உறுப்பினர்கள் பிரதேசத் தலைவர் முன் பதவிப் பிரமாணம் செய்யவிருக்கின்றனர். (இ-3- 5

## ஜூனியர் விகடன் சஞ்சிகைகள் தீக்கிரை

சென்னை, மார்ச் 12

தமிழ் நாட்டில் வெளியாகும் பிரபல சஞ்சிகையான 'ஜூனியர் விகடன்' இதழில் பிரசுரமான செய்தி ஒன்றுக்கு தம்து எதிர்ப்பைத் தெரிவித்து தமிழக மாநில காங்கிரஸ் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் அந்த சஞ்சிகையின் பிரதிகளை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்தசம்பவத்தை படம் பிடித்த படப்பிடிப்பாளரின் கமெராவை ஆர்ப்பாட்டக்காரர்கள் சேதமாக்கினர். (ஐ)

## ஈ.பி.டி.பி. உடனடி...

(முதலாம் பக்கத் தொடர்)
மக்களின் பிரச்சினைகள் தொடர்பான இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளைப் பொறுப்பேற்போம்''

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. கைப்பற்றிய 10 பிரதேச சபைகளையும் பொறுப்பேற்காதது குறித்துக் கேட்டபோதே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக அரசு அறிவித்தபோது, ''தேர்தலால் யாழ். மக்கள் நிம்மதி அடையமாட்டார்கள். ஆகையால் தேர்தல் வேண்டாம்'' என்றோம். என்றாலும் தேர்தல் வந்தது. நாம் பங்குபற்றினோம்.

யாழ். குடாநாட்டில் பத்து பிரதேச சபைகளில் வெற்றி பெற்றோம். ஆனாலும் அரசியல் இலாபம் கருதி நாம் சபைகளை நடத்த விரும்பவில்லை. மக்களின் தேவை, நலன்களைப் பாதுகாக்கவே உள்ளூராட்சிச் சபைகளை நடத்த விரும்புகிறோம்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுற்றதும், சபைகளை நடத்துவதற்கு ஒவ்வொரு சபைக்கும் தலா 30 லட்சம் ரூபாவீதம் நிதி உதவி வழங்குமாறு ஜனாதிபதியிடம் நேரில் சந்தித்துக் கேட்டோம். நிதி தருவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஆனால் இப்போது முதல் கட்டமாக ஒவ்வொரு சபைக்கும் தலா 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி இப்போது மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நேற்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் தேவைகள், நலன்கள் அதாவது பிரச்சினைகள் தொடர்பாக தேர்தலுக்கு முன்பொதுவேலைத் திட்டம் ஒன்றை கோரிக்கையாக வைத்த நாம், அதில் காணாமல் போனோர் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு நியமித்தல், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கல், காங்கேசனில் உள்ள வளங்களைக் கொண்டு சிமெந்து தொழிற்சாலையை இயங்க வைத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கி இருந்தோம்.

அத்துடன் பாடசாலைகளை புனரமைக்க 100 லட்சம் ரூபாவை ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதியிடம் நேரில் கேட்டோம். அவர் முதற்கட்டமாக 30 லட்சம் ரூபா ஒதுக்குவதாக உறுதியளித்தார்.

இது போன்ற மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதும், நாம் சபைகளைப் பொறுப்பேற்பதுடன் உறுப்பினர்கள் ஏனைய சபைகளிலும் பதவிகளை ஏற்பர். பிரச்சினைகள் பூர்த்தியாக்கப்படாமல் சபைகளைப் பொறுப்பேற்பதில் அர்த்தம் ஏதும் இல்லை —

இப்படி டக்ளஸ் மேலும் தெரிவித்தார். (இ-3)

## வந்தாறுமூலை...

(முதலாம் பக்கத் தொடர்)
நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சகோதரர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-21)

## மட்டக்களப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்)
முறைகள் பாதுகாப்புத் தரப்பினால் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

★ போக்குவரத்துச் சபை பஸ், தனியார் பஸ் உட்பட சகல பஸ் பயணிகளும் மன்னம்பிட்டி, மாதுறுஓயா சந்தியில் இறங்கி வேறு வாகனத்தில் பயணம் தொடரவேண்டும்.

★ லொறிகளில் எடுத்து வரப்படும் பொருள்களும் இறக்கப்பட்டு வேறு லொறிகளில் மாற்றப்படவேண்டும்.

★ மட்டக்களப்பிலிருந்து புறப்படும் அரச வாகனங்கள் 24 மணித்தியாலம் மாதுறு ஓயா சந்தி சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்ட பின்பு தான் செல்ல அனுமதிக்கப்படும்.

★ அம்புலன்ஸ் சேவைகள் மட்டும் வழமைபோல் நடைபெறலாம். (இ-21)

## துறைமுகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)
திருகோணமலைத் துறைமுகத்தில் அந்த நேரம் எண்ணெய்க் கப்பல் ஒன்று தரித்து நின்றதாகவும் அதனைத் தாக்குவதன் மூலம் துறைமுகப் பகுதியில் பேரழிவை ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டிருக்கலாம் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ-3-10)

## திருமலைத்...

(முதலாம் பக்கத் தொடர்)
களின் வானொலி தெரிவித்தது. இந்த தாக்குதலில் ஏழு கடற்படையினர் உயிரிழந்ததாகவும் அது தெரிவித்தது.

வெடிகுண்டுடன் வந்த புலிகளின் படகில் இரு கடற் கரும்புலிகள் இருந்ததாகவும்—

படையினரின் வாட்டர் ஜெட் படகே தாக்கி அழிக்கப்பட்டதாகவும்— மற்றும் ஒரு செய்தி தெரிவித்தது. (இ-21-7-9-3)

இப்பத்திரிகைநியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org